பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 19 சனிக்கிழமை (02.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 157

# பாதுகாப்பு வலயம் மீதான குண்டு வீச்சுப் படங்கள்

# அம்பலமானது குறித்து ஐ.நாவிடம் அரசு ஆட்சேபம்

## விசாரணை நடத்துமாறு பிரதிநிதி புஹுனேயை அழைத்து அமைச்சர் சமரசிங்க வலியுறுத்து





கொழும்பு, மே 2

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து, ஐக்கிய நாடுகள் சபையினால் பிடிக்கப்பட்ட அந்தரங்கச் செய்மதிப்படங்கள் ஊடகங்களுக்கு கசிந்தது குறித்து இலங்கை அரசாங்கம் கொழும்பிலுள்ள ஐ.நாவின் இலங்கைக்கான இணைப்பாளர் (பிரதிநிதி) நீல்புஹுனேயிடம் விளக்கம் கோரியுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க, கொழும்பிலுள்ள ஐ.நா. பிரதிநிதி நீல் புஹுனேயை நேற்று அவசரமாக அழைத்து, ஐக்கிய நாடுகளினால் மிகவும் அந்தரங்கமாகப் பேணப்பட வேண்டிய - உணர்ச்சி



பூர்வமான - படங்களை ஊடகங்களுக்கு கசிய விட்டது எப்படியென்று உடனடியாக விசாரணைநடத்திஉண்மைநிலையை வெளிப்படுத்துமாறு கேட்டார். அமைச்சருடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்னாவும் கூட இருந்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் மீது விமானத் தாக்குதல் ஐ.நாவின் செய்மதிப் படங்கள் மூலம் அம்பலம்

### இராணுவம் பொறுப்பல்ல என்று அரசு அறிவிப்பு

கொழும்பு, மே 2

இலங்கையில் பாதுகாப்பு வலயம் மீது விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையை உறுதி செய்யும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் இரகசிய செய்மதிப் படங்கள் பகிரங்கமாக்கியுள்ளன என்று பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'த டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பி.பி.ஸியும் புகைப்படங்களை வெளியிட்டது

இதேவேளை, முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களை எடுத்துக்காட்டும் செய்மதிப்படங்கள் தமக்குக்கிடைத்திருப்பதாக பி.பி.ஸி. வானொலிச் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறி விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு வாருங்கள்!

### ஜனாதிபதியின் அழைப்புப் பிரசுரம் தமிழில் விமானம் மூலம்

கொழும்பு,மே2

முல்லைத்தீவு, மக்கள் பாதுகாப்பு வலயத்தில் தங்கியுள்ள மக்களை வெளியேறி விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பு அடங்கிய தமிழில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் அந்தப் பகுதியில் விமானம் மூலம் போடப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் விடுதலைப்புலிகளால் நீங்கள் அனுபவிக்கும் சொல்லெணாத்துன்பங்களை நான் அறிவேன். (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பகுதி மீது ஷெல் வீச்சுத் தொடர்கிறது

### பொதுமக்களுக்கு பேரிழப்பு; அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்ரன், மே 2

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகள் மீது கனரக ஆயுதத்தாக்குதலை நிறுத்தியிருப்பதாக இலங்கை அரசு உறுதியளித்துள்ள போதிலும், அங்கு இன்னமும் ஷெல் வீச்சு நடத்தப்படுவதாகவும், அச்சம் தரும் அளவுக்கு பொது மக்களுக்கு பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை இராணுவம் தொடர்ந்தும் பொதுமக்களின் பகுதிகள் மீது ஷெல் தாக்குதலை மேற்கொள்வதும், விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதும் ஏற்றுக்கொள் (02 ஆம் பக்கம் பார்க்க)

## பிச்சைக்காரர்கள் போல மூன்று வேளையும் உணவுக்குக் கையேந்துகிறார்கள் இடம்பெயர்ந்த மக்கள்

### வவுனியா நலன்புரி நிலையங்கள் குறித்து யாழ். ஆயர் கவலை



கொழும்பு, மே 2

வன்னியில் இருந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி வாழும் மக்கள் மூன்று வேளையும் பிச்சைக்காரர்கள் போல் உணவுக்கு கையேந்துகிறார்கள். இந்த நிலைமை மிகவும் பரிதாபகரமானது; வேதனைக்குரியது.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கவலையுடன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா நலன்புரி நிலையங்களைப் பார்வையிட்ட பின்னர் கொழும்புக்கு நேற்று வந்துள்ள அவர் அங்குள்ள மக்களின் அவல நிலையை விவரித்தார்.

அவர் கூறியவை வருமாறு:-

மக்கள் குடியிருப்பதற்காக அரசாங்கத்தினால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் பாதுகாப்பானவையும் சர்வதேச தரம் வாய்ந்தவையும் அல்ல. மக்கள் களைத்து சோர்வடைந்த நிலையில் இருக்கிறார்கள்.

வவுனியாவில் உள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)





கொசி உணவகம்

Feel at home

தினந்தோறும்

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

வழி பலாலி, ஸ்ரான்லி வீதியின் ஊடாக எமது றெஸ்ரோறன்ரை வந்தடையலாம்

Free Delivery Town Limit

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம் T.P.No: 021-2225899

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நீங்கா நினைவுகளில் பன்னிரண்டு ஆண்டுகள்....



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 | 14 |
| ★ | ★ |
| 12 | 05 |
| ★ | ★ |
| 1926 | 1997 |

திதி: 02.05.2009

## திருமதி புவனேஸ்வரி அரியதுரை

பன்னிரு ஆண்டுகள் ஆகிவிட்டதம்மா
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
எங்கள் மனங்களிலிருந்து இன்னும்
நீங்கள் மறையவில்லையம்மா.

என்றும் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வேலப்பர் வீதி,
அரியாலை.

# மரண அறிவித்தல்கள்

## லீலாவதி சின்னையா

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப ்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி சின்னையா (30.04.2009) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அல்பேட் சின்னையாவின் (முன்னாள் ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் - தையல்நாயகி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னையாவின் மருமகளும், ரேவதி, இந்துமதி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜன் பொன்னுத்துரை, அரியகுமார் ஆசீர்வாதம், லதாராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் யொகானா, டியினா, சேரா, சரோன், அரூபி ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் புனிதவதி (கனடா) கனகசபாபதி (அவுஸ்திரேலியா), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.05.2009) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Apt.1204, 1, Fountain Head Rd,
North York, ONTARIO M3J1K6,
CANADA. T.P 001-416-7391960

தகவல்:
திருமதி அருந்ததி சிறிபத்மானந்தா

## சூசை தீயோகுப்பிள்ளை



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கிளாலியை வசிப்பிடமாகவும் கூழாவடி, ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சூசை தீயோகுப்பிள்ளை நேற்று (01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சூசை தம்பதியினரின் அன்பு மகனும் புலோமினாவின் அன்புக் கணவரும், பத்திநாதர், மேரிமாக்கிறேற் (பூபதி), காலஞ்சென்ற ஆரோக்கியநாதர் மற்றும் இப்பொலிற் (குணம்), மரியசீலி (வசந்தா), அருட்பணி சூசைநாதன் (O.S.B, கண்டி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கிறிஸ்துராசா(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), கொலஸ்றிக்கம்மா, மேரி ஆகியோரின் அன்பு மாமனாரும், மேரிபமிலா, றீகன், விக்ரர், நியூட்டன், உசாந்தினி, ஜக்சன், பெல்சியா, கிளிற்றஸ், ஜீன்சன், டொறிசியா, டினாகிறிஸ்ரினா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சூசைமரியானின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சலோமையின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி, ஆனைக் கோட்டை. தகவல்: குடும்பத்தினர்.

# வன்னி மக்களுக்கு உதவ றோட்டறி நிதி சேகரிக்கிறது

யாழ்ப்பாணம் மே.2

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உதவ நிதி சேகரிப்பில் யாழ். றோட்டறிக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இந்த நிதிசேகரிப்பு செயற்பாடு நேற்று ஆரம்பமாகியுள்ளது.

யாழ். றோட்டறிக் கழகத்தின் நெறிப்படுத்தலில் நகர்மைய றோட்டறக்ட் கழகம், யாழ்ப்பாணம், நல்லூர்,சுன்னாகம் றோட்டறக்ட் கழகங்கள் ஆகியவற்றின் தொண்டர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அல்லற்படும் உறவுகளுக்கு உதவ நிதி உதவி வழங்குமாறு றோட்டறிக் கழகம் கேட்டுள்ளது. (1)

# பாதுகாப்பு வலயம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளவே முடியாத விடயங்கள் எனவும் கடுமையாகக் குற்றம் சாடியுள்ளது அமெரிக்கா. எனவே இலங்கைப் பிரச்சினைகளின் தீவிரம் குறித்து பாதுகாப்புச் சபையை ஆராய வேண்டுமெனவும் அமெரிக்கா கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் சுசன்ரைஸ், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு இலங்கை நிலைவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இருதரப்பும் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. அதேவேளை, இலங்கையில் நெருக்கடி மோசமடையும் சூழ்நிலையில் பாதுகாப்புச் சபையில் உள்ள அனைவருக்கும் கடப்பாடுகள் உள்ளன என்றும் தெரிவித்துள்ள சுசன்ரைஸ் இது தொடர்பாக மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அங்கு இடம்பெறும் மோதல் மேலும் அதிகரிக்கும் மோசமான மனிதாபிமான நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளது. இரு தரப்பும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறுவது குறித்த கடுமையான குற்றச்சாட்டு குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இருதரப்புகளின் நடவடிக்கைகளும் முற்றாக ஏற்றுக்கொள் முடியாது

இலங்கை அரசு மோதல் நடவடிக்கைகளை நிறுத்துவதாக உறுதியளித்த போதிலும், மோதல் நடைபெறும் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறுவதை பல தகவல்கள் புலப்படுத்தியுள்ளன. அச்சம் தரும் அளவுக்குப் பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளமை குறித்தும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவது குறித்தும் நம்பகத்தன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ளன. சில சமயங்களில் வெளியேற முயலும் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதவை.

சுவீடனின் வெளிவிவகார அமைச்சர் கார்ல்பில்ட் கொழும்புக்கு விஜயம் மேற்கொள்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்காதது ஏமாற்றமளிக்கின்றது.

இலங்கை அரசு ஏன் அவரைத் திருப்பி அனுப்புகின்றது என்பதைப் புரிந்துகொள்வது அமெரிக்காவுக்குக் கடினமாகவுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகள் மனிதாபிமானக் குழுவை அனுமதிப்பதில்லை என்ற தனது முடிவை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்.

இலங்கைப் பிரச்சினையின் தீவிரம் குறித்து பாதுகாப்புச்சபை ஆராயவேண்டும். புதிதாக இடம்பெயர்ந்து வரும் மக்கள் பதிவுசெய்யப்படும் பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகளையோ அல்லது செஞ்சிலுவைக் குழுவையோ அனுமதிக்க வேண்டும் -எனவும் அவர் கேட்டுள்ளார். (சி)

# பணிநயப்பு வாழ்த்து
2009.05.02



## கிறிஸ்ரோபர் பிரான்சிஸ் சேவியர்

(ஆங்கிலம் விசேட பயிற்சி ஆசிரியர், யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்)

நல்லாசானாய், நட்பிற்கிலக்கணமாய்
நம் கல்விச்சாலைதனில்
நற்பணியாற்றி இன்று பணி ஓய்வு பெறும்
நாயகனே நலமுடன் வாழ்க பல்லாண்டு

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.
யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.

(84763)

# ஓராண்டு நினைவலைகள்



| மண்ணிலே | விண்ணிலே |
|---|---|
| 19 | 13 |
| ★ | ★ |
| 04 | 04 |
| ★ | ★ |
| 1942 | 2008 |

திதி: அட்டமி

## துரையப்பா ஐயாத்துரை

அன்பு கொண்டு எமையெல்லாம்
அரவணைத்த திருவுருவே
ஏங்க வைத்து எமையெல்லாம்
ஏமாற்றிச் சென்றின்று
ஓராண்டு ஆனாலும்
உம் நினைவு மாறாது

20, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சண்முகலிங்கம் பாக்கியலட்சுமி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் பாக்கியலட்சுமி கடந்த 30.04.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - காளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சண்முகலிங்கத்தின் பாசமிகு மனைவியும் கண்ணன்(லண்டன்), உதயன் (பிரான்ஸ்), றஜிதா (டென்மார்க்), ஆகியோரின் அன்புத் தாயாரும் வக்சலா, வளர்பிறை, குணதாஸ், ஆகியோரின் பாசமிகு மாமியாரும். முத்துசாமி, குமரகுரு, பகவதியம்மா, ஆகியோரின் அன்புச் சம்பந்தியும் காலஞ்சென்ற நடனலட்சுமி மற்றும் சரோஜினிதேவி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, வைத்திலிங்கம் , மற்றும் தங்கவடிவேலு, ரட்ணசோதி(பனை அபிவிருத்தி சபை), ஆகியோரின் அன்பு மைத்துனியும், சினேகா, அனுஷா, அபர்ணா, நிலாசினி, நிலக்சன், நிஜீத், அஸ்வின், லட்சுமி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,காலஞ்சென்ற மகேஸ்வரி, மற்றும் கிருஸ்னேஸ்வரி (பவளம்), ரவீந்திரநாதன் (இ.மி.ச), லோகேந்திரன்(நோர்வே), லோகேஸ்வரி (லண்டன்), கேசவராணி, குணேந்திரன் (லண்டன்), கமலினி (பிரான்ஸ்), சாந்தினி (இந்தியா), மனோராஜ் (லண்டன்) அகியேரின் அன்புச் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (30.04.2009) வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22/5, கச்சேரி நல்லூர் வீதி,
பாரதி ஒழுங்கை, சண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்,
குடும்பத்தினர்.


# எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை

April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்



"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service

(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)

உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)

எமது நிறுவனத்தில் அடையாள அட்டை,பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
E.Mail: moorthydigital@gmail.com


# நெல்லியடி நலன்புரி நிலையத்தில் கட்டைவேலி சங்கத்தின் கிளை

வடமராட்சி மே 2

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களின் வசதி கருதி நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அங்கு விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. (1-236)


# இறைச்சிக் கோழி விற்பனை

நிறைகூடிய தரமான புறொயிலர்
இறைச்சிக் கோழிகள்
விற்பனை செய்யப்படுகின்றன.
செம்மணி பாம்,
77/3,செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சர்வதேச ஊடக சுதந்திர தினம்

நாளை சர்வதேச ஊடக சுதந்திர தினமாகும்.

ஊடக சுதந்திரத்திற்காகவும், ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்காகவும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் குரல் எழுப்பும் பல்வேறு நிகழ்வுகள் இத் தினத்தை ஒட்டி இடம்பெறவிருக்கின்றன.

உலகில் ஊடக சுதந்திரம் மிக மோசமாக நசுக்கப்படும் நாடுகளில் பிரதானமான இடம் இலங்கைக்கு.

நாட்டில் ஒருபுறம் உள்நாட்டு யுத்தம் மிகக் கோரமான வடிவம் எடுத்திருக்கும் அதேவேளை, மறுபுறம் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைப் போரும் பொல்லா வடிவம் எடுத்திருக்கின்றது.

ஆட்சித் தரப்பின் அல்லது பெரும் பான்மைச் சிங்களத் தீவிரப் போக்காளரின் எண்ணப் போக்குக்கு மாறான கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது ஆபத்தான விவகாரமாக மாறியிருக்கின்றது.

சிந்தனைச் சுதந்திரமும், கருத்து வெளிப்பாட்டு உரிமையும் நாட்டின் உயர் சட்டமான அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அது இங்கு வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது. கருத்துச் சுதந்திரம் நடைமுறையில் கிலோ என்னவிலை என்று கேட்கும் நிலைமையே இங்கு நீடிக்கின்றது.

அவசர காலச் சட்ட விதிகள் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்றவை ஆட்சித் தரப்புக்கு வழங்கியுள்ள கட்டுமட்டில்லாத அதிகாரங்கள் மூலமாகவோ அல்லது 'வெள்ளைவான்' கலாசாரத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் அராஜகங்கள் மூலமாகவோ ஊடக சுதந்திரம் நேர்த்தியாக அடக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றது.

*'ஒன்றில் நீங்கள் எங்கள் பக்கத்தில் நிற்க வேண்டும். இல்லையேல் பயங்கரவாதிகள் பக்கத்தில் நிற்கின்றீர்கள் என்று அர்த்தம்'* - என்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற நிலைப்பாட்டையே கொழும்பு அதிகார வர்க்கம் இப்போது ஊடக விவகாரத்தில் கையாள்கின்றது.

இதனால் தென்னிலங்கை ஊடகங்கள் பலவும் கொழும்பு அதிகாரத்தரப்பின் சிந்தனைப் போக்கிற்கு ஏற்ப, அதற்குத் துதிபாடும் நிலை மாற்றத்திற்கு உள்ளாகியிருப்பது வெளிப்படை.

பேரினவாதச் சிந்தனைப் போக்கை நடைமுறையில் வெற்றிகரமாக நிலை நிறுத்துவதில் கொழும்பு ஆட்சித் தனத்தின் கெட்டித்தனமும் அதன் வழி தென்னி லங்கை ஊடகங்கள் பின்தொடர்வதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

எது, எப்படியென்றாலும் ஒரு ஜனநாயக நாட்டில் மாற்றுச் சிந்தனைக்கும், கருத்து வெளிப்பாட்டுக்குமான உரிமைகள் நிலைநிறுத்தப்படுவது பிரதானமானதும் அவசியமானதுமாகும். ஆனால் அதுதான் இங்கு மறுக்கப்படுகின்றது.

மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிப்பதில்லை என்ற அடக்குமுறைப் போக்கின் உச்சமாக இந்த ஆண்டில் முதல் நான்கு மாதங்களிலேயே பல்வேறு கொடூரச் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டு விட்டன.

அரசின் உள்வீட்டு அராஜகங்களை அம்பலப்படுத்தி வந்த 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க தலைநகர் கொழும்பில் பட்டப்பகலில் - ஆரவாரமான போக்குவரத்து நடைபெறும் பகுதியில் - பாதுகாப்புச் சோதனைச் சாவடிக்கு அண்மையில் - நட்ட நடு வீதியில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

கொழும்பு, தெபானாமவில் உள்ள எம்.ரி.வி. நிறுவனத்தின் கலையகத்துக்குள் புகுந்த குண்டர் குழு ஒன்று அங்கு வெறியாட்டம் நடத்தி, குண்டுகளை வெடிக்க வைத்து, அக்கலையகத்துக்குத் தீ மூட்டி, நெருப்பு வைத்து பல கோடி ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டு சாவகாசமாகத் தப்பிச் சென்றிருக்கின்றது.

தலைநகரில் சன நெரிசல் மிக்க பகுதியில் வைத்து 'ரிவிர' பத்திரிகை ஆசிரியர் குண்டர் கும்பலால் கத்திக் குத்துக்கு இலக்கானார்.

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் பலர் முன்னிலையில் பலவந்தமாகக் கடத்தப்பட்டு, பின்னர் அது 'கைது' ஆக மாற்றப்பட்டு அவர் மீது அபாண்டமாகப் 'பயங்கரவாதி' என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

கிழக்கில் 'வார உரைகல்' சஞ்சிகையின் ஆசிரியர் கொடூரமாகத் தாக்கப்பட்டார்.

இவை எல்லாம் மாற்றுக் கருத்துக்களைப் பொறுக்க - சகிக்க - முடியாத தரப்புகளினால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஊடக அத்துமீறல் நடவடிக்கைகளாகும்.

தவிரவும், அவசரகால விதிகள் மற்றும் பயங்கரவாதச் சட்டம் போன்றவற்றின் கீழ் ஆட்சித் தரப்புக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுமட்டில்லா அதிகாரம் தங்கள் மீது ஏவப்படும் என்ற அச்சத்திலும் -

வெள்ளைவான் ஆள்கடத்தல்கள், அராஜகத் தாக்குதல்கள் போன்றவை தங்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் என்ற பீதியிலும் -

பல முக்கிய ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளனர். பலரின் பேனாக்களும் குரல்வளையும் அடங்கி, அசாதாரண அமைதி காக்கின்றன. போர்முனைச் செய்திகளை வழக்கமாக வெளிப்படுத்தி வந்த முக்கிய இராணுவ ஆய்வாளர்கள் கூட அஞ்ஞாத வாசம் புரிவதுடன் அமானுஷ்ய மௌனம் காக்கின்றார்கள்.

இவை எல்லாம் இலங்கையின் ஊடக சுதந்திரத்தின் அவல நிலையை அம்பலப்படுத்தும் நிலைப்பாடுகளாகும்.

எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த சமயம், நாட்டில் மனித உரிமைகளுக்காகவும், கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்காகவும் தமது உயிரைக் கூடப் பணயம் வைத்து தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அயராது குரல் எழுப்பி, கடுமையாக உழைத்தவராகத் தம்மை வெளிக்காட்டிக் கொண்ட ஒருவரின் ஆட்சி அதிகாரத்தின் கீழேயே ஊடக சுதந்திரம் இன்று இத் தேசத்தில் இந்த இழிநிலைக்குச் சென்றிருக்கின்றது என்பது நம்பமுடியாத உண்மையாகும்.

சர்வதேச ஊடக சுதந்திரதினம் பிறக்க இருக்கையில் முதல் நாள் முன்னிரவில் 'உதயன்' அலுவலகத்துக்குள் அராஜகக் கும்பல் ஒன்று இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் புகுந்து வெறியாட்டம் நடத்திய கொடூர தினத்தின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளும் இன்றாகும். அன்று பலியான எமது சக பணியாளர்களுக்கு அஞ்சலி செய்து அவர்களை இத்தினத்தில் நினைவு கூர்வதுடன் ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காகவும் உழைப்போமாக!

# ஒப்புக்கொண்ட விடயங்களை மதித்துச் செயற்படுத்துங்கள்

## இலங்கையை வலியுறுத்துகிறது பிரான்ஸ்

நியூயோர்க், மே.2

அனைத்துலக சமூகத்துக்கு கொடுக்கும் வாக்குறுதிகள் எதனையும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில்லை எனக் குற்றம் சாட்டியிருக்கும் பிரான்ஸ், ஒப்புக்கொண்ட விடயங்களை மதித்துச் செயற்படுமாறு சிறிலங்கா அரசாங்கத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

'இது ஒரு ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கை என்பதை சிறிலங்கா அரசாங்கத்துக்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக உள்ளோம்' என ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரான்சின் தூதுவர் ஜெயின் மொறிஸ் றிப்பிட் நியூயோர்க்கில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற அதிகாரபூர்வமற்ற விவாதத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் உரையாடினார்.

சிறிலங்கா அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் ஒரே நிலையில் வைத்து அனைத்துலக சமூகம் பார்க்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், சிறிலங்கா அரசாங்கம் தான் ஒப்புக்கொண்ட விடயங்களை மதித்துச் செயற்படவில்ல என்பது அதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது எனவும் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசு பல விடயங்களைச் செயற்படுத்துவதற்கு ஒப்புக் கொண்டிருக்கின்றது. கனரக ஆயுதப் பாவனையை நிறுத்துவதாகக் கூறியுள்ளது. மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக ஐ.நா.வின் மனிதாபிமானப் பணியாளர்களை அனுமதிப்பதாகக் கூறியிருக்கின்றது. இடம்பெயர்ந்த மக்களை முதலாவது வடிகட்டும் பகுதிக்கு அனைத்துலக அவதானிகளை அனுமதிப்பது தொடர்பான சாத்தியங்களை ஆராய்வதாகவும் கூறியிருந்தது. அத்துடன் மனிதாபிமான அமைப்புக்கள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு அனுமதிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த உறுதிமொழிகளில் பெரும்பாலானவை இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் ஐ.நா. பாதுகாப்புச் சபை வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (50)

## பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு சேவையாற்ற தொண்டு நிறுவனங்களைஅனுமதிக்க வேண்டும்

### இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோரிக்கை

கொழும்பு,மே.2

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக மோதல் தவிர்ப்பு வலயம் மற்றும் அகதி முகாம்களில் சென்று சேவையாற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்குமாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

தொண்டு நிறுவனங்கள் குறித்து ஏற்கனவே இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டு நிறுவனங்களை அனுமதிக்குமாறு இந்தியா முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

அகதிகளுக்கு 40,000 நிவா[illegible] பொதிகளை வழங்கும் நிகழ்[illegible] கலந்து கொண்டபோது அவர் இ[illegible]னைக் குறிப்பிட்டுள்ளார்.

# இடம்பெயர்வுக்கு ஆளாகிய மக்களுக்கு நிரந்தர குடியிருப்பு வசதிகளைச் செய்க!

## ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்து

கொழும்பு, மே, 02

இடம்பெயர்வுகளுக்கு உள்ளான மக்களுக்கு நிரந்தர குடியிருப்புகளை நிர்மாணித்துக் கொடுக்க அரசு முன்வரவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

மோதல் பிரதேசங்களில் இருந்து அன்றாடம் ஏராளமான பொதுமக்கள் முகாம்களுக்கு வந்தவண்ணம் உள்ளனர். இவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களும் தற்போது சனநெரிசல் மிக்கனவாக உள்ளன.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்களினால் அதிக அளவில் பொதுமக்களே பாதிப்படைகின்றனர்.

இந்த நிலையில் பாரிய அளவில் அதிகரித்துள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கு, வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணி வசதிகளை அரசு வழங்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மேரி ஒகாபே தெரிவித்துள்ளார்.

மோதல் பிரதேசத்தில் இருந்து இதுவரையில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பொதுமக்கள் வந்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் எவரும் ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடக்கவில்லை என அரசு ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளின் பின்னர் ஒரு லட்சத்து 10 ஆயிரம் பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்துள்ளனர்.

அவர்களுக்கான உணவு, தங்கும் கூடாரங்கள் உள்ளிட்ட வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்வதில் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது என்றும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகளின் துணைச் செயலர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களில் கல்வி நடவடிக்கைகள் மற்றும் சுகாதார, பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன வளர்ச்சியடைந்து வருகின்றன.

வவுனியா முகாம்களை விட யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்கள் ஒப்பீட்டளவில் சிறந்தனவாகக் காணப்படுகின்றன என ஐக்கிய நாடுகள் சபை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அரசு உறுதியளித்த தன்படி, இதுவரையில் 111 முதியவர்களையே விடுதலை செய்துள் ளது எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (50)

| நாளை | |
|---|---|
| சித்திரை 20 | 03.05.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | நவமி |
| | பி.ப. 02.22 வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.இ. 01.05 வரை |
| சுபநேரம்: | [illegible]-10.26 |
| ராகுகாலம்: | 04.2[illegible]-05.5[illegible] |

# பிரி. ,பிரான்ஸில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களை அந்நாட்டு அரசுகள் கட்டுப்படுத்தவில்லை

## வெளியுறவுச் செயலாளர் கொஹன்ன கவலை

கொழும்பு, மே 2

பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தமிழர்களால் நடத்தப்படும் போராட்டங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளை வன்மையாகக் கண்டித்துள்ளது இலங்கை. இந்த ஆர்ப்பாட்டங்களில் விடுதலைப் புலிகளின் கொடிகளைப் பயனப்டுத்துவதற்குக் கூட அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த வெளிவிவகாரச் செயலாளர் பாலித கோஹன்னவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு :-

அல் குவைதா அமைப்பின் ஆதரவாளர்கள் இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைச் செய்தால் மேற் குலக நாடுகளின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்திருந்த பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரான்ஸ் நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கும் நான் இந்த விடயங்களைத் தெரியப்படுத்தினேன்


இது தொடர்பாக நாம் சுட்டிக்காட்டியதற்குப் பதிலளித்த பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட், லண்டனில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மக்களுக்குள்ள ஒரு ஜனநாயக உரிமையாகும். ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களின் போது தூதரகக் கட்டடங்கள் ஏதாவது தாக்குதலுக்குள்ளானால் அது தொடர்பாக விசாரணை நடத்தப்படும். கடந்த வாரத்தில் 200 ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரிட்டிஷ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என மல்லிபாண்ட் சுட்டிக்காட்டினார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு அந்த நாடுகளில் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருக்கின்றது. அந்த நிலையில் அதற்கு ஆதரவா[illegible] ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்ப[illegible]கின்றன. இதேபோல் அல் குவைதா அமைப்புக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டால் மேற்குலக நாடுகள் அதனைச் சகித்துக்கொள்ளுமா என பிரிட்டன் அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் இது தொடர்பாக மேற்படி இரு நாடுகளிடமும் தொடர்ந்தும் நாம் கேள்வி எழுப்புவோம். தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடிகளையும் அவர்கள் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுமினியின் அதிரடி ஆட்டத்தால் கொல்கத்தா அணியை வீழ்த்தியது மும்பை



டர்பன், மே 2

ஐ.பி.எல். ருவன்ரி -20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை 9 ஓட்டங்களால் வீழ்தியது மும்பை இந்தியன்ஸ் அணி.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் இப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் தோல்வி அடைந்ததன் மூலம் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய சனத்ஜெயசூரியா 6 ஓட்டங்களுடனும் சச்சின் டெண்டுல்கர் 2 சிக்ஸர்கள், 3 பௌண்டறிகள் அடங்கலாக 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இப்போட்டியில் ஹர்பஜன் சிங் மூன்றாவது துடுப்பாட்ட வீரராக இறங்கி 6 ஓட்டங்களையும் நாயர் 10 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த டுமினி சிறப்பாக துடுப்பெடுத்தாடி 37 பந்துகளில் 1பௌண்டறி 4 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் நபியர்(15), ரஹானே (10) என ஆட்டமிழக்க, ஷகீர்கான் ஆட்டமிழக்காது 2 ஓட்டங்களைப் பெற 20 ஓவர்கள் நிறைவில் மும்பை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் சார்பில் பந்து வீசிய இஷாந்சர்மா, டின்டா, கார்த்திக், அஹார்கர், கிறிஸ்கெய்ல், ஹோட்ஜ், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

149 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடஸ்ர் சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கிறிஸ்கெய்ல் (7), கங்குலி(0) என ஏமாற்றமளிக்க ஹோட்ஜ் அதிரடியாக ஆடி 6 பௌண்டறிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 73 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டானார். வான்வைக் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க பின்னணி வீரர்கள் சுக்லா(6), மெக்கலம்(5) என ஆட்டமிழந்தனர் ஷா 8 ஓட்டங்களுடனும், அஹார்கர் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் 20 ஓவர்களும் நிறைவடைய 6 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது கொல்கத்தா அணி.

மும்பை இந்தியன்ஸ் சார்பில் பந்து வீசிய ஷகீர்கான் 3 வீக்கெட்டுக்களையும் நபியர், நாயர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் டுமினி தெரிவானார். (1- 6)

## மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் காலிறுதியில் லியாண்டர் ஜோடி

ரோம், மே2

ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் லூகாஸ் லூயி ஜோடி முன்னேறியுள்ளது. உலகின் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் இத்தாலியில் உள்ள ரோமில் நடந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் லூகாஸ் லூயி ஜோடி, குரோஷியாவின் இவோ கார்லோவிச், சேர்பியாவின் துஷன் வெமிக் ஜோடியை சந்தித்தது.

விறுவிறுப்பான போட்டியின் முதல் செற்றை பயஸ் ஜோடி 6-1 என எளிதாகக் கைப்பற்றியது. தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பயஸ் ஜோடி 6-1 என இரண்டாவது செற்றை தன்வசப் படுத்தியது. இறுதியில் பயஸ் - லூகாஸ் ஜோடி 6-1, 6-1 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

## ரெய்னாவின் அதிரடியால் சென்னைக்கு வெற்றி!

செஞ்சூரியன், மே 2

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடந்த ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் ரெய்னாவின் அதிரடியால் சென்னை அணிக்கு 2ஆவது வெற்றி கிடைத்தது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடந்த மற்றொரு ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸும், நடப்பு சம்பியன் ராஜஸ்தான் ரோயல்ஸும் செஞ்சூரியனில் மோதின. சென்னை அணியில் இரு மாற்றமாக கோனி, ஜோகிந்தர் ஷர்மா ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக புதுமுகங்கள் சுதீப் தியாகி, ஷதப் ஜகதி ஆகியோர் சேர்க்கப்பட்டனர். நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் ஷேன் வோர்ண் முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைக் குவித்தது.

சுரேஸ்ரெய்னா 52 பந்துகளில் 98 ஓட்டங்களைப்பெற்று சத வாய்ப்பைத் தவற விட்டார். அணித் தலைவர் டோனி 22 ஓட்டங்களுடனும், அல்பிமோர்கல் 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தார்கள்.

அடுத்து 165 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி ஆடியது. ஆரம்ப வீரர் ஸ்மித் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததும், சென்னை அணியின் உற்சாகம் ஆரம்பமானது. அதன் பின்னர் குறிப்பிட்ட இடைவெளியில் அந்த அணியின் விக்கெட்டுகளை சென்னை வீரர்கள் வீழ்த்திய வண்ணம் இருந்தனர்.

அந்த அணியின் அதிரடி மன்னன் யூசுப் பதான், சென்னை அணிக்கு அச்சுறுத்தலாக இருப்பார் என்று கருதப் பட்டது. நல்ல வேளையாக அவரை 20 ஓட்டங்களில் (13 பந்துகள், 3 பௌண்டறிகள்) பாலாஜி வெளியேற்றினார். அவர் ஆட்டமிழந்ததும் ராஜஸ்தான் அணியின் நம்பிக்கை தகர்ந்தது. இறுதிக்கட்டத்தில் சென்னை பந்துவீச்சாளர்கள் முழுமையாக ஆதிக்கம் செலுத்தினார்கள்.

முடிவில் 19.3 ஓவர்களில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 126 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது. காயம் காரணமாக ராஜஸ்தான் அணியில் கம்ரன் கான் ஆடவில்லை என்பது குறிப்படத்தக்கது. அந்த அணியில் அதிகபட்சமாக ரவீந்திர ஜடேஜா 37 ஓட்டங்களும், குயினே 28 ஓட்டங்களும் எடுத்தனர். சென்னை அணியின் தரப்பில் அபாரமாகப் பந்து வீசிய தமிழக வீரர் பாலாஜி 4 விக்கெட்டுகளும், அல்பி மோர்கல், ஓரம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு இது 2ஆவது வெற்றியாகும். முன்னதாக பெங்களூர் அணியை வீழ்த்தி இருந்தது. ராஜஸ்தான் அணிக்கு இது 3ஆவது தோல்வியாகும்.

முதலாவது ஐ.பி.எல். சீசனில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான 3 ஆட்டத்திலும் சென்னை அணி தோற்றிருந்தது. அதற்கு இந்த 2ஆவது ஐ.பி.எல். போட்டியில் சென்னை அணி பழிதீர்த்துக்கொண்டது.

## டெக்கான் சார்ஜஸின் வெற்ற் நடைக்கு முட்டுக்கட்டை போட்டது ஷேவாக் அணி

செஞ்சூரியன், மே.2

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் தொடர்ந்து வெற்றி பெற்றுவந்த டெக்கான் அணியின் வீறு நடைக்கு நேற்றுமுன்தினம் டில்லி டேர் டெவில்ஸ் முட்டுக்கட்டை போட்டது.

2ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் மற்ற அணியுடன் தலா 2 ஆட்ங்களில் மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதில் நேற்றுமுன்தினம் செஞ்சூரியனில் நடந்த ஒரு ஆட்டத்தில் ஹைதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், டில்லி டேர்டெவில்ஸ் அணியும் சந்தித்தன. ஹைதராபாத் அணியில் தொடர்ந்து மோசமாக ஆடிய முன்னாள் அணித் தலைவர் வி.வி.எஸ்.லக்ஷ்மன் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக புதுமுகம் திருமால் செட்டி சுமன் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணித் தலைவர் ஷேவாக் முதலில் டெக்கான் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

149 ஓட்ட இலகுடன் களமிறங்கிள டில்லி அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 150 ஓட்டங்கள் குவித்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டில்ஷான் 52 ஓட்டங்கள் (46 பந்துகள், 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) விளாசி கடைசி வரை களத்தில் இருந்தார். டெக்கான் அணியின் இரண்டு முக்கியமான விக்கெட்டுக்களை வீழ்த்திய டில்லி பந்து வீச்சாளர் நேன்ஸ் (அவுஸ்திரேலியா) ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்த ஐ.பி.எல். தொடரில் முதல் நிலையில் விளங்கும் டெக்கான் அணி தொடர்ச்சியாக 4 வெற்றிக்குப் பின்னர் சந்தித்த முதல் தோல்வி இதுவாகும். 5ஆவது ஆட்டத்தில் ஆடிய டில்லி அணிக்கு இது 4ஆவது வெற்றியாகும்.

# கிழக்கில் சிவில் நிர்வாகம் இருப்பின் மாணவர்கள் கடத்தப்படுவது ஏன்?

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, மே, 02

கிழக்கு மாகாணம் முற்றாக விடுவிக்கப்பட்டு இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டு, சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என அரசு கூறும் இவ் வேளையில் மட்டக்களப்பு நகர்ப்பகு தியில் பாட சாலைக்குச் சென்ற மாணவர்கள் காணாமல் போயிருக்கும் சம்பவமானது பலத்த சந்தேகத்தையும், பேரதிர்ச்சியையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி யுள்ளது.

கடத்தப்பட்ட மாணவர்கள் மனிதாபி மான முறையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக வேண்டுகோள் விட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, தங்கேஸ்வரி, பா.அரியநேத்திரன், எஸ். ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு :-

கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயத்திற்கு தமது தாத்தாவுடன் பாடசாலைக்குச் சென்ற எட்டு வயது மாணவியான சதீஸ்குமார் தனுஷியா என்பவர் இது வரை வீடு திரும்பவில்லை. இவரை யாரும் கடத்திச் சென்றிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இந்த மாணவியின் தந்தையான சதீஸ் குமார் என்பவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இனந்தெரியாத ஆயுதக்குழு வினர் விசாரணைக்கென அழைத்துச்சென்று இதுவரை அவருக்கு என்ன நடந்தது என்றே தெரியாத நிலை உள்ளது.

இந்நிலையில் ஏக்கத்துடன் இரண்டு வருடங்களாக தனது அப்பாவைக் காணாமல் அல்லல் அடைந்திருந்த இம்மாணவி கடத்தப்பட்டிருப்பது மிகவும் கவலையும், கண்ணீர் சிந்தும் விடயமுமாகும்.

மட்டக்களப்பில் சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஏரம்பமூர்த்தி ஜனார்தன் (வயது 12) மற்றும் ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் வள்ளுவன் மதிசுதன் (வயது 15) ஆகியோரும் காணாமல் போயுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்துள்ளது என அறியமுடி யாத நிலையில் உள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பில் தொடர்ச்சியான முறையில் மாணவர்கள் காணாமல் போயிருப்பதால் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருப்பதுடன் பாடசாலைகளுக்கும், பிரத்தி யேக கல்வி நிலையங்களுக்கும் மாணவர் களைக் கல்வி கற்க அனுப்பமுடியாத பதற்ற நிலை தோன்றியிருப்பதைக் காணமுடி கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மாணவர்கள் காணாமல் போன செய்தி கேட்டவுடன் அனைத்துப் பாடசாலைகளும் இயங்கவில்லை. தனியார் கல்வி நிலையங்களுக்கும் மாணவர்களை அனுப்ப பெற்றோர் அஞ்சுகின்றனர்.

எனவே கடத்தப்பட்ட இம்மாணவர்களை உடனடியாக மனிதாபிமான முறையில் விடுதலை செய்யவேண்டுமெனவும், இது தொடர்பாக சட்டத்தையும் ஒழுங்கையும் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தியுள்ளது எனக் கூறும் அரசு இம்மாண வர்கள் கடத்தலுக்குப் பின்னணியில் இருப்பவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமெனவும், இவ்வாறு செய்வதன் மூலம் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றியுள்ள அச்சநிலை தணியும் - என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-சி)


## மரண அறிவித்தல்

### கந்தையா வன்னியசிங்கம்

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட கந்தையா வன்னியசிங்கம் நேற்று (01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து -பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சற்குணத்தின் அன்புக் கணவரும், தவமணிதேவி (அச்சுவேலி), புவனேஸ்வரி (ஜேர்மனி), வரதராசா (கனடா), மயூரகிரி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத்தந்தையும் குலநாயகம் (அச்சுவேலி), இராசரத்தினம் (ஜேர்மனி), சாரதாதேவி (கனடா), சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தீர்த்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கந்தையா கனகசபாபதி

(ஓய்வு பெற்ற ரயில்வே கண்காணிப்பாளர்)



கோண்டாவில், உப்புமடத்தைப் பிறப்பிடமாகவும், கல்லூரி ஒழுங்கை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபாபதி நேற்று (01.05.2009) வெள்ளிக்கிழமை தமது இல்லத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கல்லூரிஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்
பொ.சிறிகரன்(மருமகன்)
(உப அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி,யாழ்ப்பாணம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் 'முகிழ்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர்கள் சகிதம் அழைத்து வரப்படுவதையும் அதி கூடுதலான புள்ளிகளைப் பெற்ற த.புருசோத்தமன் என்ற மாணவனுக்கு ஆசிரியர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சைக்கிளை வழங்குவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் மற்றும் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா, ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (9)

## ஆள்கள் இல்லாத நேரம் கூரைபிரித்து திருட்டு

யாழ்ப்பாணம், மே 2

வீட்டுக்காரர்கள் கோயிலுக்குச் சென்றிருந்த நேரத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் பட்டப்பகல் வேளை முகட்டுக் கூரையைப் பிரித்து வீட்டில் இறங்கி வானொலிப்பெட்டி, டி.வி.டி. பிளேயர் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளார்கள்.

கடந்த புதன்கிழமை மல்லாகம் தெற்கு நீலியம்பனைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (203-68)

## வரிசையில் நின்று நெரிபட்டு விழுந்த பெண்ணுக்கு கை முறிந்தது

யாழ்ப்பாணம், மே 2

நலன்புரி நிலையத்தில் பதிவுக்காக வரிசையில் நின்ற வேளையில் நெரிசல் ஏற்பட்டு கீழே வீழ்ந்த பெண்ணுக்கு கை முறிந்தது.

இச்சம்பவம் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் இடம்பெற்றது.

சுப்பிரமணியம் சந்திராதேவி (வயது 56) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)

## கசிப்பு உற்பத்தி இடத்தை சுற்றி வளைத்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 2

மீசாலை மேற்கில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தைச் சுற்றி வளைத்த சாவகச்சேரி பொலிஸார் உற்பத்தியாளரைக் கைது செய்ததுடன், உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு மற்றும் உற்பத்தி உபகரணங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நபரை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த நீதிவான் கசிப்பு உற்பத்தி மற்றும் உற்பத்தி உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் 36 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (203-207)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளர் வருகை குறைவடைந்தது

யாழ்ப்பாணம், மே 2

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நலன்புரி நிலைய நோயாளர்கள் வருவது பெருமளவில் குறைந்துள்ளது.

வைத்தியசாலையிலிருந்து தினமும் மருத்துவக்குழு நலன்புரி நிலையங்களில் நடமாடும் சேவை நடத்துவதால் நோயாளர்கள் வருகை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் சிகிச்சை பெறுவோரில் அவசர சிகிச்சை பெறுவோர் மட்டும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## மீள் சுழற்சி மூலம் திண்மக் கழிவிலிருந்து பசளை தயாரிப்பதற்கு நடவடிக்கை

வடமராட்சி, மே 2

பருத்தித்துறைப் பிரதேசசபை திண்மக் கழிவுகளிலிருந்து மீள் சுழற்சி முறையில் பசளை தயாரிக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

திண்மக் கழிவுகளை அகற்றி பசளை தயாரிப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குச் சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பொதுசுகாதார உத்தியோகத்தர்கள், கிராமசேவை அலுவலர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், விவசாயப் போதனாசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நகர மயமாக்கல் திட்டத்திற்கமைய புலோலிப் பிரதேசத்தை மையமாக வைத்து மந்திகை, புலோலி தென்மேற்கு, புலோலி வடமேற்கு, புலோலி கிழக்கு, புலோலி தெற்கு, வல்லிபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கென இக்கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கமைய ஆனைவிழுந்தான் பகுதியில் உள்ள சபைக்குச் சொந்தமான 6 பரப்புக்காணியில் கூட்டுப் பசளையை மீள் சுழற்சி முறையில் தயாரிப்பதற்கென 6 இற்கு மேற்பட்ட குழிகள் வெட்டப்பட்டு குப்பை கூழங்கள் போடப்பட்டு கூட்டுப் பசளை தயாரிக்கப்படும். இதற்கு காலாசலைப் போதனாசியரின் அறிவுரை பெறப்படும்.

கூட்டுப்பசளை தயாரிப்பதற்கான குப்பை கூழங்கள் புலோலி நகரப் பகுதி மையத்தைச் சுற்றித் துப்புரவு செய்யப்படும் கழிவுகளை வகைப்படுத்தி உழவு இயந்திரங்கள் மூலம் எடுத்து உரிய இடத்தில் சேமித்துப் பயன்படுத்தப்படும்.

இதற்கென கிராமங்கள் தோறும் குடியிருப்பாளர்களுக்கு பொலித்தீன் பைகள் வழங்கப்படும். அவற்றின் மூலம் கழிவுகள் சேகரிக்கப்படும்.

மீள்சுழற்சி கூட்டுப்பசளை தயாரிக்கும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் ஆலோசனைக்குழுவும், பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ச.சந்திரயோகன் தலைமையில் நடவடிக்கைக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (203-236)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நவாலி வடக்கு பெத்தனாச்சி கிராமத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

மானிப்பாய், மே 2

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இருளில் மூழ்கியிருந்த நவாலி வடக்கு - பெத்தனாச்சி ஆலய கிராமத்திற்கு மின் வழங்கப்படவுள்ளது.

இலங்கை மின்சாரசபை அலுவலகம் 21 மின்கம்பங்களை நாட்டியுள்ளது.

நவாலி வடக்கு பெத்தனாச்சி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.சபாரத்தினசிவம், நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் ஆகியோர் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்தே மின்கம்பங்கள் இடப்பட்டுள்ளன.

விரைவில் மின்சார சபை மின்வயர்களை பொருத்தி இம்மாத இறுதிக்குள் மின் வழங்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவாலி தெற்கு, கொத்துகட்டி வீதியில் உள்ள எச்.எஸ்.சி.எம்.எவ் நிறுவனத்திற்கு முன்னுள்ள மின்கம்பிகள் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக சரிந்த நிலையில் உள்ளதாகவும் -

இதனால் நூலகம் மற்றும் சிறுவர் முன்பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் பயப்பீதியுடன் செல்வதாகவும் அப்பகுதி பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (203-95)

## உள்ளூராட்சி அலுவலர்களுடன் பிரதம செயலாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 2

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி அலுவலர்களை வடமாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய் மாலை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் உள்ளூராட்சி உதவியாளர்கள், ஆயுள்வேத டாக்டர்கள், சபைச் செயலாளர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தென்மராட்சிப் பிரதேசத்தில் 'நிஷா' பாதித்தோருக்கு உதவி

யாழ்ப்பாணம், மே 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் 'நிஷா' புயல் காற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் 500 பேருக்கு நேற்று முன்தினம் 'போடே' நிறுவனத்தினரால் உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் 'போடே' நிறுவன உத்தியோகத்தர்களால் 15 கிராம அலுவலர் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருள்களை விநியோகித்தனர்.

கோயிற் குடியிருப்பு, வரணி வடக்கு, உசன், கொடிகாமம் வடக்கு, பாலாவி, கச்சாய், வெள்ளாம் கோக்கட்டி, மட்டுவில் கிழக்கு, மட்டுவில் வடக்கு, மட்டுவில் மத்தி, கைதடி-நுணாவில், தென்-மட்டுவில், நுணாவில் மேற்கு, கைதடி தெற்கு, கைதடி தென்கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கே பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (203-207)

## சாவகச்சேரி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளோர்களுக்கு சமைத்த உணவு

யாழ்ப்பாணம், மே 2

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு சாவகச்சேரி நகர் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினால் உணவு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்படும் உலர் உணவுப் பொருள்களை சமைத்து வழங்கும் பணியினை மகளிர் சங்கம் கடந்த 21ஆம் திகதி தொடக்கம் மேற்கொண்டு வருவதாகவும்-

மதியஉணவும், இரவு உணவுக்கான கறியும் சமைத்து வழங்குவதாகச் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். (203-207)

## அரசினர் வைத்தியசாலைகளுக்கு காலாண்டுக்கான மருந்துகள்

யாழ்ப்பாணம்,மே 2

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கான இரண்டாம் காலாண்டுக்கான மருந்து விநியோகம் அடுத்த இரண்டு வாரகாலத்துக்குள் பூர்த்தியடையும்.

இரண்டாம் காலாண்டுக்குத் தேவையான மருந்து வகைகள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு கடந்த வாரம் முதல் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு துரிதமாக விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார் (203-236)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இச்சிறுவர் பூங்காவை வைத்தியாலை விடுதியிலிருந்து சிகிச்சைபெற்றுவரும் சிறுவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். சிறுவர் பூங்காவின் முகப்பு வாயிலையும் அங்கு அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு எதிரான குற்றங்கள் இழைக்கப்பட்டனவா? விசாரணைகளை நடத்த முயல்கின்றது பிரிட்டன் அரசு

கொழும்பு,மே2

இலங்கையில் பொதுமக்களுக்கு எதிராகக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்ற உடனடி விசாரணையொன்றுக்கு பிரிட்டன் அழைப்பு விடுமென அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்திக்கான பிரதிய மைச்சர் மைக்கல் பொஸ்டெர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பாக புதன்கிழமை இடம்பெற்ற விவாதத்திற்கு பதில் அளித்து உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு-

இலங்கைக்கு இரு நாள்களுக்கு முன்னர் விஜயம் மேற்கொண்டேன். வவுனியாவில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம்களைப் பார்வையிட்டேன்.

இவர்களில் 113 பேர் கடந்த பத்து நாள்களில் வந்துள்ளனர். அவர்கள் களைத்துப் போனவர்களாகவும் அச்சத்தில் உறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். பலர் இரண்டு நாள்களாக உணவு எதுவுமின்றி நடந்து முகாமிற்கு வந்துள்ளனர்.

நான் பலரைச் சந்தித்தேன். அவர்கள் தாங்கள் சந்தித்த மோசமான நிலையைத் தெரிவித்தனர். தாங்கள் ஒருநாள் தமது பகுதிகளுக்குத் திரும்பச் சென்று குடும்பத்தவருடன் இணைய முடியுமென்ற விருப்பத்தை வெளியிட்டனர்.

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்குண்டுள்ள சரியான எண்ணிக்கை தெரியாத மக்கள் தமது உயிர் குறித்த அச்சத்துடன் மிகக் குறைந்த அடிப்படை வசதிகளுடன் வாழ்கின்றனர்.

மிகச் சிறிய பகுதியில் காணப்படும் நிலையைப் பாரிய குழப்பம், பேரழிவு என மக்கள் விவரித்தனர்.

பொதுமக்கள் மோதலில் சிக்குண்டுள்ளனர். ஒவ்வொரு மனிதாபிமானத் தேவையும் பூர்த்திசெய்யப்படவில்லை. நிலைமை வேகமாக மோசமடைகின்றது. விடுதலைப் புலிகள் பொது மக்களைப் பலவந்தமாகச் சேர்க்கின்றனர்; சிறுவர்களையும் சேர்க்கின்றனர். இதனை நாம் மிகக் கடுமையான விதத்தில் கண்டிக்கின்றோம்.

மோதல் நடைபெறும் பகுதிகளில் சர்வதேச பிரசன்னம் எதுவுமில்லை. செஞ்சிலுவைக் குழு மாத்திரம் விடுதலைப் புலிகளின் பகுதிகளில் செயற்படுகின்றது. மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து தப்பிவந்த மக்கள் தொடர்பாகவும் மனிதாபிமான கரிசனைகள் அதிகரிக்கின்றன.

இவர்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர். முகாமிற்கு வெளியே செல்வதற்கான நடமாட்ட சுதந்திரமில்லை. சமீபத்தில் இடம்பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய தயார் நிலையில் இருக்கவில்லை. இவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யாமலுள்ளன.

முகாம்கள் சகல அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றுபவையாக அமைவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது - என்றார். (சி)

## மோட்டார் சைக்கிள் ரயர் வெடித்ததில் தூக்கி வீசப்பட்டு இருவர் காயம்

யாழ்ப்பாணம்,மே2

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளின் முன்சில்லு ரயர் திடீரென வெடித்ததில் அதில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இச் சம்பவம் மட்டுவிலில் இடம் பெற்றது. மீசாலை மேற்கைச் சேர்ந்த த.ரூப சீலன் (வயது 24), பு.பகீரதன் (வயது 23) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு த.ரூபசீலன் என்பவர் மேலதிகச் சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)

## ஊவா, தென்மாகாணங்களுக்கு ஒரு சில மாதங்களில் தேர்தல்

கொழும்பு,மே2

மேல்மாகாணசபைத் தேர்தல் முடிந்ததைத் தொடர்ந்து தென் மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதுபற்றி அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சபைகளின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒரு சில மாதங்கள் உள்ளன என்றும் அவ்வாறு முடிவுற்றதும் தேர்தல் நடத்த அரசு ஆலோசித்து வருகின்றது என்றும் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுமுன்தினம் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டுக்குப் பூரண சுதந்திரத்தைப் கொடுத்திருப்பதன் காரணத்தால் இந்நாட்டு மக்களுக்கு அரசின்மேல் ஒரு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேல்மாகாண சபைத் தேர்தலில் மக்கள் எமது அரசை பெரு வெற்றிபெறச் செய்தனர். வடக்கில் எஞ்சியுள்ள சிறிதளவு பயங்கரவாதமும் ஒழிக்கப்பட்ட பின்னர் அங்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலும் நடத்தப்படும்.

தற்போது ஊவா மற்றும் தென்மாகாண சபைகளின் பதவிக்காலம் இன்னும் ஓரிரு மாதங்களில் முடிவடையும். அவ்வாறு முடிவடைந்ததும் அவற்றுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது.

மேல்மாகாணசபைத் தேர்தலில் அபார வெற்றிபெற்றதுபோல் எதிர்காலத்தில் அனைத்துத் தோல்விகளிலும் அரசு அபார வெற்றியீட்டும். வெகு விரைவில் பயங்கரவாதத்தையும் முற்றாக இல்லாதொழித்து அரசு இந்நாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கும் - என்றார். (சி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே.2

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஆங்கிலத்துறைத் தலைவர் செல்விவே.சுமங்கலா அறிவித்துள்ளார். (203-204)

## ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி,மே2

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''இதிகாசங்கள்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் பொன். சுகந்தன் சொற்பொழிவாற்றுவார். (203-236)


### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23-11-1969
உதிர்வு 02-05-2006

பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)
(சந்தைப்படுத்தல் முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம்)

செபம்

எம் அன்புத் தந்தையே இறைவா, எம்மைவிட்டுப் பிரிந்து உம் திருமுன் வந்து நிற்கும் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் என்னும் அடியாருக்காக உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம். இவ்வுலகில் அவரை உம் கண்ணின் கருமணிபோல் பாதுகாத்து, வழிநடத்திய நீர் அவரை ஏற்றுக்கொண்டு ஆறுதலும், அமைதியும் நிறைந்த இறை உலகில் சேர்த்தருளும். இவரை இழந்து பரிதவிக்கும் அனைவர் மீதும் உமது கருணைக் கண்களைத் திருப்பி அவர்களைத் தேற்றியருளும். இவர் உம்மோடு வாழ்கிறார் என்பதை அவர்கள் உணரச் செய்து மன அமைதியைக் கொடுத்தருளும் - ஆமென் -

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக, கொழும்பு - 15, பாம் வீதி, 'கார்மேல் மாதா' சிற்றாலயத்தில் இன்று காலை 6.30 மணிக்கும், மருதானை 'புனித பாத்திமா அன்னை' ஆலயத்தில் பகல் 12.10 மணிக்கும் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்படும்.

சுரேஷ் / அப்பா

உடலால் எம்மைப் பிரிந்தாலும் உள்ளத்திலும், உணர்வுகளிலும் என்றுமே எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

மனதைப் பிளக்கும் உங்கள் பிரிவால் கண்களில் கண்ணீர் முத்துக்களோடு கலங்கி நிற்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி - சுவேந்தினி,
பிள்ளைகள் - அல்றின், சேஷா
BRISBANE, AUSTRALIA

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டாசோன்ட் (DACHOND)
நாய்க் குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 0776487264.

### காணி விற்பனைக்கு

திருமண மண்டபம்அமைக்கக்கூடிய நான்கு பரப்புக் காணி திருநெல்வேலி மத்தியிலும்,தென்னை மரங்களுடன் கூடிய 13 1/2 பரப்புக் காணி கோண்டாவில் பகுதியிலும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0779232988


### நீத்தார் நயப்புரை

'இன்றைய உதயனில் 9 ஆம் பக்கத்தில் புராணபடன வித்தகர்' க.சுப்பிரமணியம் குறித்த நீத்தார் நயப்புரையினை எழுதியவர் புலோலி தெற்கு பராஜசிங்கம் ரமேஷ் ஆவார்.

### இடம்பெயர்ந்தோருக்கு உதவி

வன்னியில்இருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் உள்ள மக்களுக்கு அமெரிக்கன் சிலோன் மிசனறியால் 4 லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ்.பிராந்திய அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைத்தலைவர்வண. ஏ. ஜெயக்குமார்தலைமையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து மேற்படி உடுபுடைவைகள் 720 குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டதாக செயலாளர் வண.ஏ. எஸ். தேவகுணானந்தன் தெரிவித்தார். (203-20)


### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 15.04.1926
ஆண்டவனடியில் 24.04.2007

அமரர்
நமசிவாயம் இராஜகோபால்
(ஓய்வுபெற்ற உப முகாமையாளர், இலங்கை வங்கி)
திதி:- அட்டமி 02.05.2009

அன்பினால் எம்மை உந்தன்
அகத்தினிற் பதிய வைத்து
எம்மை இவ்வுலகில் என்றும்
ஏற்றமாய் வாழ வைத்த
ஏந்தலே உம்மை எண்ணாத
நாளில்லை இதயத்தில் எப்போதும்
இணைந்திருப்பீர் என்றிருந்தோம் உறுதியுடன்
பாசத்தின் பொக்கிசமே பரவுகின்றோம் சாந்தி பெற...

கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு,உரும்பிராய்.
தொ.பே:- 2226348

அன்பு மனைவி
திருமதி. காந்திமதி இராஜராஜகோபால்
( ஓய்வு பெற்ற ஆசிரியை, பெறாமக்கள்).

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04.12.1958
மறைவு 14.04.2007



அமரர்
கணேசபிள்ளை சிவகுமார்
திதி:- அபரபக்க துவாதசி

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை
ஆளாக்கி ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு இன்றுடன்
இரு ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்......

சிவன்கோயிலடி,
சித்தங்கேணி.

குடும்பத்தினர்.

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 . 05 . 1950
விண்ணில் 16 . 05 . 2005



திருமதி
நகுலேஸ்வரி குகேந்திரன் (பிரேமா)
திதி:- 02.05.2009

என் இதய அன்னையே!
என் கல்வித் தகைமையினால்
இன்புற்றிருக்கும் இவ்வேளையில்
எம்முடன் நீங்கள் இல்லையே அம்மா!
மனம் துடிக்கின்றது
என்றும் உங்கள் நினைவுடன்....

கணவர் ந.குகேந்திரன்,
மகன் கு.பிருந்தாவன்

பாண்டியன் தாழ்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் மார்கழி இசைவிழா – 2008


இ.குமாரசாமி சர்மா
ஓய்வுபெற்ற உதவித் திட்டப் பணிப்பாளர்.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

சென்னையில் உள்ள சபாக்களில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தனவாக மிளிர்பவை மியூசிக் அக்கடமி. நாரத கான சபா தமிழ் இசைச் சங்கம், பாரதிய வித்யாபவன் கிருஷ்ணகானசபா இந்தியன் பைன் ஆட்ஸ், வாணி மகால் பிரம்மகான சபா, கலாரசனா ஸ்ரீபார்த்தசாரதி சபா என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

பிரபல்யம் பெற்ற சிறந்த இசைப்பாடகர்களான ரி.என்.சேஷகோபாலன், சஞ்சேல் சுப்பிரமணியம், ரி.எம்.கிருஷ்ணா, அருணா, சாயிராம், நெய்வேலி சந்தானகோபாலன், ஓ.எஸ்.தியாகராஜன், ஓ.எஸ்.அருண், ரி.வி.சக்கரநாராயணன், சுதா ரகுநாதன், நித்யஸ்ரீ மகாதேவன், பிரியா சகோதரிகள், ரஞ்சனி, காயத்ரி, உன்னி கிருஷ்ணன், யேசுதாஸ், மல்லாடி சகோதரர்கள் ஆகியோரது இசை நிகழ்ச்சிகள் சபை நிறைந்து சிறப்பாக அமைந்தன. அவர்கள் ராக ஆலாபனை ராகம், தாளம், பல்லவி, ராகமாலிகையில் பாடி நிரவல் செய்து மிகவும் சாரீர சுத்தமாகவும் கம்பீரமாகவும் இனிமையாகவும் பாடி ரசிகர்களின் பலத்த பாராட்டுதல்களைப் பெற்றனர்.

வாத்தியக் கலைஞர்களில் தனியாக வாத்தியங்கள் வாசித்த வயலின் ஜி.ஜே.ஆர்.கிருஷ்ணன் விஜயலக்சுமி, கணேஸ், குமரேஸ் ஆகியோரும் மென்டலின் யு.ஸ்ரீனிவாஸ் என்பவரும் சித்திர வீணை ரவிக்கிரன், சக்சப்போன் கதிரிகோபிநாத், புல்லாங்குழல் என்.ரமணி ஆகியோரும் சிறப்பாக வாசித்த முதல்தர இசைக்கலைஞர்கள் ஆவர். மிருதங்க கலைஞர்களான உமையாள்புரம் சிவராமன், திருவாரூர் வைத்தியநாதன், வி.பிரசாத், பி.கணபதிராமன், ஸ்கந்த சுப்பிரமணியன், திருச்சி சக்கரன், குருவாயூர் துரை, ரி.பக்தவத்சலம், மன்னார்குடி ஈஸ்வரன் ஆகியோர் சிறப்புவாய்ந்த இசைக் கலைஞர்களின் கச்சேரிகளில் சிறப்பாக மிருதங்கம் வாசித்து பலத்த பாராட்டுக்களைப் பெற்றவர்களாவர்.

சென்னை இசைவிழாக்களில் பல்வேறு சபாக்களிலும் கண்ணிற்கும் காதுக்கும் இசை விருந்தாவதுடன் பல வகைகளான அறுசுவை உணவுகளையும் உண்டு மகிழ்வதற்கும் முடிகின்றது. உண்மையில் சென்னையில் கடந்த மார்கழி மாதம் முழுவதும் மெய்மறந்து இத்தகைய சிறந்த இசையினை ரசிக்க, பார்க்க முடிந்தமை மறக்கமுடியாத நிகழ்வாகும். இதுபோன்று எமது நாட்டிலும் இசைவிழாக்கள் முன்னைய காலங்களில் நடைபெற்றன போன்று எதிர்காலத்தில் எமது கலைஞர்களும் தென்இந்திய கலைஞர்களும் பங்குகொள்ளவும் ரசிகர்கள் பார்க்கக்கூடியதாகவும் அமைய காலம் கைகூடவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(முற்றும்)

## வார வசந்தம்

# பிணி நீக்கும் கனிகள்



- ★ **மாம்பழம்:** தோல்வியாதிகள், சீதபேதி, நரம்புக்கோளாறு, மூலம் ஆகியன குணமாகும். இதில் நார்ச்சத்து அதிகமாதலால் தோலுடன் சாப்பிடவேண்டும்.
- ★ **வாழைப்பழம்:** மூளைவளர்ச்சி, உடல் சக்தியைப் பெருக்கும். மலச்சிக்கல், மயக்கம், பித்தம் என்பவற்றைப் போக்கும். இது சாமான்ய மக்களின் பழம். தினமும் 2 பழங்கள் புசிக்கவேண்டும்.
- ★ **கொய்யாப்பழம்:** இருதய நோய், மலச்சிக்கல், வயிற்றுப் புண்கள் அல்லது அல்சர், பல்நோய்கள், நீரிழிவு உள்ளவர்கள் அதிகம் உண்ணவேண்டிய பழமாகும்.
- ★ **அன்னாசி:** வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லும், மஞ்சள் காமாளை, உடல் வலிக்கு உகந்தது.
- ★ **அப்பிள்பழம்:** மூளை நோய், நரம்புத்தளர்ச்சி, மலச்சிக்கல் போன்றவைக்கு உகந்தது. ஆங்கில மருந்து மாத்திரைக்கு பதில் தினம் ஓர் அப்பிள் சாப்பிட்டால் நல்ல பயன்தரும்.
- ★ **தக்காளிப்பழம்:** மூளை வளர்ச்சி தரும், சோகை நோய் குணமாகும், உட்சூடு குறையும். தினம் ஒரு தக்காளி பச்சையாக உண்பது நலமாகும்.
- ★ **தோடம்பழம்:** தூக்கமின்மை, சிரங்கு, சோரியாசிஸ், சொறி படை, டி.பி. பல நோய்களுக்கு சிறந்த நிவாரணியாகும்.
- ★ **பேரிச்சம்பழம்:** சளி, இருமல், பித்தம், மயக்கம், இரத்த சுத்திகரிப்பு, இரத்தக்குறைவு, ஆண்மைக் குறைவு, இருதய நோய்கள் ஆகியவற்றுக்கு சிறந்த பலன்தரும் பழம்.
- ★ **மாதுளம்பழம்:** இரத்தக்குறைவு, நெஞ்சுவலி, எரிச்சல், பித்தம், சீதபேதி, வாந்திபேதி ஆகியவற்றுக்கு சிறந்த நிவாரணியாகும்.

தகவல்: வ.க.ஜெயபாலன் ஜே.பி.
யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.

# இசுறுமுனிய விகாரை செதுக்கல் கலை

அநுராதபுரத்தில் திஸ்ஸ குளத்துக்கு அருகில் உள்ள இசுறுமுனிய விகாரையில் காணப்படுகின்ற செதுக்கல் சிற்பங்கள் கலை ஆக்கச் சிறப்புடைய முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவை கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்கும், 7ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதெனக் குறிப்பிடப்படுகின்றது. விகாரை முதலாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதெனக் கூறப்படுகின்றது.



இசுறு முனிய கற்பாறைச் சுவரில் அரைப்புடைப்புச் சிற்பமுறையில் செதுக்கப்பட்ட சிற்பங்களை இங்கு காணலாம். அவை யாவன-

1) மனிதனும் குதிரைத்தலையும்
2) காதலர் சிற்பம்
3) நீராடும் யானைகள்
4) அரண்மனைக் காட்சிகள்

**மனிதனும் குதிரைத்தலையும்**

இசுறுமுனிய விகாரைக்குளத்து பாறைச் சுவரின் மேல் பகுதியின் முகப்பில் அரைப் புடைப்புச் செதுக்கல் நுட்பமுறையில் மனிதனின் வடிவம் ஒன்றும் குதிரையின் தலை ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கு உரியதொன்றாகும். பல்லவ சிற்ப முறைக்கு ஏற்ப செதுக்கப்பட்டுள்ளது.

கற்பாறையைக்குடைந்து வெளித்தள்ளிய அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளது. இடக்காலை மடித்து ''மகாராஜ'' இருக்கையில் அமர்ந்து இருக்கும் இம்மனிதன் வலது கையை முன்னால் நீட்டி முழங்காலின்மேல் வைத்து மறுகையை நிலத்தில் ஊன்றிய அமைப்பில் காணப்பட்டுள்ளது. இவ் மனிதனுக்குப் பின்னால் அழகிய இயற்கைத் தன்மையுடைய குதிரைத்தலை ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன .

1) ஆனந்த குமாரசாமி
   * இது குதிரையும் வீரனும் எனக் குறிப்பிடுகின்றார்
2) செனரத் பரண விதாரன
   *மனிதனை மழைக்கு அதிபதி என்றும் குதிரையை நெருப்பாகவும் கூறியுள்ளார்.

த.கஜேந்திரன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# யாருமே காணாத ஒரு தூரிகண்ணீர்

இதுவரை என்னுடைய பாடசாலை மாணவப் பருவத்தினதும் தற்போது ஆசிரிய கால அனுபவங்களையும் தங்களுடன் பகிர்ந்துகொள்ள முடிந்தது.

முதற்கண் இத்தனை தொடர்களையும் பிரசுரித்த உதயன் பத்திரிகைக்கும், அதன் ஆசிரியர், வடிவமைப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழனின் சொத்தாகக் கருதப்படுவது கல்வி ஒன்றுதான். இப்போது எஞ்சி நிற்கும் சொத்தும் அதுதான். எமது ஆதாரமும் அதுதான். எமக்குரிய வாய்ப்புகள் உரிய முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதே என்னுடைய முழுமையான அபிப்பிராயம்.

இக்கருத்து நிலையைத் தற்போது நாம் உணர்கின்ற வீதம் குறைவடைவதாகவே நான் கருதுகின்றேன். இது எவ்வாறு எனில் குறித்த ஒரு பகுதியினர் வாய்ப்புகளைச் சரிவரப் பெற்றுக்கொள்ள ஏனையவர் அதனது அருமை தெரியாமல் தவறவிடுவதாகவே உணரமுடிகின்றது.

இவ்வாறான நிலைகளைத் தெளிவாக்கவும், உணரவைக்கவும் என்ற நோக்கில் எழுதப்பட்டதே இத்தொடர். இதில் குறைகள் இருக்கலாம். யாரையும் புண்படுத்தியும் இருக்கலாம்.

ஆனால் மனதறிந்து யாரையும் நோகடிக்க எதையும் நான் எழுதவில்லை. அவ்வாறு உணர்ந்துகொண்டால் போதும்.

மாணவ சமூகம் பள்ளிக்கு வருவது ஆசிரியரை நம்பித்தான். கல்வியின் அருமை, பெருமை, சிறப்பநிலை யாவற்றையும் உணர்த்தவேண்டியது ஆசிரியராகிய எமது கடமையாகும். இதில் தனிப்பட்ட ரீதியில் நான் பின்நின்றதில்லை. இயன்றவரை அவர்களை வழிப்படுத்த முயன்று இருக்கிறேன். சிலவேளைகளில் கடினமானவனாகவும் மாணவர்களால் உணரப்பட்டும் இருக்கின்றேன்.

எவ்வாறெனினும் மாணவர்கள் விழிப்படைவதே எனது நோக்கம். இதற்காகவே சுவாரசியமான சம்பவங்களுடன் இத்தொடர் எழுதப்பட்டது.

என்னுடைய பதின்மூன்று வருட ஆசிரியப் பணியில் கண்ட அனுபவங்களினை உங்களுடன் பகிர்ந்துமுடித்திருக்கின்றேன். இதில் சில ஆசிரிய நண்பர்களுடையதும் ஆகும். நீண்ட அனுபவம் மிகுந்த ஆற்றலும் கொண்ட ஆசிரிய சமூகம் யாழ்ப்பாணத்திற்குரியது. இவர்களைச் சரிவர பயன்படுத்தவேண்டியது மாணவர்கள், பெற்றோர்களின் கெட்டித்தனமாகும்.

இத்தொடருக்கு நிறைய வாசகர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதைக் கடிதங்கள் மூலம், வாய்வழித் தகவல்கள் மூலம் அறிந்து மகிழ்ந்து இருக்கின்றேன்.

இளம்பிராயத்தினர் இத்தொடரை எழுதுபவர் யார் என்று வினாவுக்கும் நிறையப் பேர் பதில் எழுதியிருக்கின்றீர்கள்.

எனவே உங்களிடம் நான் அன்பாகவும், வினயமாகவும் கேட்டது நல்ல கல்வியைத் தேடுங்கள், பெற்றோரை மதியுங்கள், ஆசிரியரை மதியுங்கள், கல்வியை மதியுங்கள். வாழ்வில் உயர்வடைவீர்கள்.

மீண்டும் இதேபோன்று ஒரு தொடரில் உங்களைச் சந்திப்பேன். அதிலும் பல விடயங்கள் உங்களுடன் பகிர்வேன்.

''இலையுதிர்த்த மரம் படுவதில்லை
நிறைய துளிர்களுடன்
அழகாகப் பூத்துக் குலுங்கும்''

(இந்த ஆண்டு க.பொ.த. (சா/த) சித்தி அடையத் தவறிய மாணவர்களுக்கான மகுட வாக்கியம்).




(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான கற்பித்தல் உபகரணம், செயல்நூல் வழங்கும் நிகழ்வில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன் ஆசிரியை ஒருவருக்கு நூலினை வழங்குவதையும் அருகில் வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: நவாலி செய்தியாளர்)

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் கணனி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் லயன் எஸ். சாந்தன் பொறுப்பாசிரியை சுகந்தினியிடம் கணனி ஒன்றைக் கையளிப்பதையும் அருகில் அதிபர் ந.சிவகடாட்சம் நிற்பதையும் படத்தில் காணலாம். (100)






நல்லூர் செம்மணி வீதி, பரி.யாக்கோபு ஆலய மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சபைக் குரு அருட்பணி அ.ஸ்ரீபன் அடிகளார், மாதர் சங்கத் தலைவி திருமதி இ.இராமலிங்கம் மற்றும் ஏனைய மாதர் சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் தையல் பயிற்சிக் கண்காட்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கை வங்கி கோப்பாய் கிளை முகாமையாளர் எஸ்.தவபாலன் உரையாற்றுவதையும் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



பண்டத்தரிப்பு பிரிவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம்நடும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் போதனாசிரியர் திருமதி ப.மணிவர்ணன் மரத்தினை நடுவதையும் தலைவர் ச.செல்வரத்தினம் பொது முகாமையாளர் ஆ.நாகராஜா இயக்குநர் சபை உறுப்பினர் லூயிஸ் க.கந்தசாமி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (30)




சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த பொதுக்கூட்டத்தில் சேவை விலகிச் செல்லும் ஆசிரியையை சாவகச்சேரி மகளிர் கல்லூரி உப அதிபர் இ.ருக்மணி கௌரவிப்பதையும் வணபிதா பி.எச். வசந்தகுமார், தலைவர் வை.இராசரத்தினம், யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.சிவகரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (59)



சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலக இளந்தளிர் இல்லத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற மாணவருக்கு நூலக அபிவிருத்தி ஆலோசனை உறுப்பினர் சொ.சிவகுமார் பரிசில் வழங்குதைப் படத்தில் காணலாம். (207)

மென்பொருள் ஆக்கத்திறன் போட்டி - 2008 இன் பரிசில் வழங்கும் நிகழ்வுகள் வேலணை மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றன. மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற வேலணை மத்திய கல்லூரி மாணவியான ஏ.சிந்துஜா வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து பரிசில் பெற்றபோது எடுக்கப்பட்ட படம் (167)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் ஆர்ப்பாட்டம்; 21 ஈழத் தமிழர்கள் கைது!

ரொறன்ரோ, மே 02

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் கனடாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியோரில் 21 தமிழர்கள் புதன்கிழமை கைதுசெய்யப் பட்டனர்.

இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்தி தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி கனடாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். அவர்களை அங்கிருந்து அகற்ற முற்பட்ட கனேடியப் பொலிஸார் ஆர்ப்பாட்டக் காரர்களில் 21 பேரைக் கைதுசெய்தனர். ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான இழுபறிகளின் போது பெண் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (சி)

# வன்னி மோதல் படங்களை வெளியிட ஐ.நா. மறுப்பாம்

கொழும்பு; மே 02

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதியில் இடம்பெற்ற பேரழிவுகள் குறித்து செய்மதிப் படங்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கு கிடைத்தும் அவற்றை வெளியிட ஐ.நா. மறுத்து வருகின்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் பொதுமக்களுக்கு ஆட்லறி ஷெல்கள் மற்றும் விமானத் தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவுகள் குறித்து அந்தச் செய்மதிப் படங்களில் தெளிவாக உள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசு மேற்கொண்டுவரும் யுத்தக் குற்றங்களை இதன் மூலம் தெளிவுபடுத்தக் கூடியதாக இருக்கும் என்று ஐ.நா.அதிகாரிகள் கருதுவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த செய்மதிப்படங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி எடுக்கப்பட் டவை என்றும் கூறப்படுகிறது. (அ-சி)

## கூட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 02

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவிருந்த பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம், பிரதேச மட்ட உளசமூக அமையக் கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டங்கள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் (204)

# மக்கள் முகம்



கைதடி தெற்கு, கைடியைச் சேர்ந்த சின்னர் புஸ்பகாந்தன் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.வசந்தசேனன் முன்னிலையில் ஏப்ரல் 16ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், பிரபல சமூக சேவையாளரும், வவுனியா காத்தார் சின்னக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆசிரியரும் ஆவார். (288)

★ ★ ★



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமைபுரியும் கருணலிங்கம் கல்வி அமைச்சில் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை வகுப்பு - 111க்கு 20.04.2009 தொடக்கம் அக்கலாசாலையிலே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சித்திரம், அழகியல், நாடகத்துறை மற்றும் ஆரம்பக் கல்வி போன்ற துறைகளில் இக்கலாசாலையில் விரிவுரையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிர்வாகிகள் தெரிவு

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண பிரதேச சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

வி.ஸ்ரீசக்திவேல் தலைவராகவும் திருமதி பிரான்சிஸ் அன்னம்மா உப தலைவராகவும் சு.கணேசலிங்கம் செயலாளராகவும் ஆ.ஆனந்தராசா உப செயலாளராகவும் கே.ஆர். லோகநாதன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் 10 பேர் தெரிவாகியுள்ளனர்.

* * *

சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயான அபிவிருத்திச் சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக ந.சண்முகவேலும், உப தலைவராக பொ.தேவராசாவும், செயலாளராக து.ஜெய ஆனந்தராசாவும், உப செயலாளராக பொ.நடேசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (100)

* * *

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

சங்கத்தின் தலைவராக மு.நாகேந்திரராசாவும் செயலாளராக டாக்டர் ச.அம்பிகைபாகனும் பொருளாளராக வை.இராசரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் 12 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (207)

* * *

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-நா.பாலச்சந்திரன்(முன்னாள் வேலணை ப.நோ.கூ.ச.தலைவர்), உப தலைவர்-வெ.விஸ்வலிங்கம், செயலாளர்-சு.சுந்தரலிங்கம், உப செயலாளர், நா.தனேந்திரன், பொருளாளர்- ஐ.ரதீஸ்வரன், முகாமையாளர்-வ.கனகலிங்கம்.

இவர்களுடன் 19 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (167)

* * *

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைக் கூட்டம் அண்மையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

சபையின் தலைவராக கா.வேதநாயகமும், துணைத் தலைவர்களான இ.இராசநாயகம், க.அருங்குணராசா ஆகியோரும் செயலாளராக சி.கந்தசாமியும் துணைச் செயலாளராக சோ.பாலச்சந்திரனும் பொருளாளராக சி.இராமச்சந்திரனும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக மேலும் ஒன்பது பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

சபையின் காப்பாளராக மகாராஜஸ்ரீ க.து. சண்முகநாதக் குருக்கள், சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், சி.இராமச்சந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட் டனர். (207)

* * *

நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தலைமையில் முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ரி.அருளப்பு, என்.தோமஸ் ஆகியோர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் நியமிக்கப் பட்டுள்ளனர். (211)

# புராண படன வித்தகர் க.சுப்பிரமணியம்

''மன்னா உலகுத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே''



என்ற புறநானூற்றுப் பாடலுக் கிணங்க சைவம், தமிழ் தழைக்கவும் தமிழ் நிலைக்கவும் தொண்டாற்றியவர்கள் ஒருசிலரே. அவ்வகையிலே புலமை ஒலி இடையறாது ஒலிக்கும் புலோலியின் தென்பகுதியில் கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை தம்பதியினருக்கு 11.09.1922 அன்று மகனாகப் பிறந்தவரே சுப்பிரமணியம். தன்னுடைய ஆரம்பக் கல்வியினை புற்றளை சாரதா பீட வித்தியாசாலையில் பெற்ற சுப்பிரமணியம் தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார், கார்த்திகேசு உபாத்தியார் முதலான அறிஞர்களிடம் சைவ, தமிழ் இலக்கியங்களை, இலக்கணங்களை ஐயம் திரிபறக் கற்றார்.

பிரமச்சாரிய நெறியிலே ஒழுகிய சுப்பிரமணியம் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக புராண படனத்துடனே தன் வாழ்வை அர்ப்பணித்தவர். கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், சிவராத்திரி புராணம், பெரிய புராணம், ஏகாதசிப் புராணம் போன்றவற்றைப் பொருளுணர்ந்து பழுதற வாசிப்பதோடு பயன் சொல்வதிலும் நிறைந்த தேர்ச்சி மிக்கவர். புற்றளைப் பிள்ளையார் ஆலயம், உபய கதிர்காம முருகன் ஆலயம், சின்னத்தாய் பிள்ளையார் ஆலயம், மூச்சம்பலம் சிவன் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம் போன்றவற்றிலே புராணபடன நியமனகாரராகச் செயற்பட்டதோடு பல பௌராணிகர்களின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர். ''புராணப் படிப்பும் பயன் சொல்லுதலும்'' எனும் அளிக்கை நிகழ்விலே இசையுடன் பாடலைப் பாடிப் பின்பு அப்பாடலின் பொருளோட்டத்துக்கு ஏற்ப தொடராகக் கூறுகின்ற பொழுது மேலோட்டமான பொருளைக் கூறுவதோடு தேவையானவிடத்து புராணக் கதைகளையும் விருத்தியுரையினையும் கூறுவதில் சுப்பிரமணியம் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

இன்று வடமராட்சிப் பகுதியிலே புராணபடனத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பலர் இவருடைய மாணவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் சைவத் தமிழ் பணியினைப் பாராட்டி பல்வேறு அமைப்புகளும் கௌரவித்துள்ளன. வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், சைவ பரிபாலன சபை முதலாகப் பல ஆலயங்களும் அன்னாரைக் கௌரவித்துப் பெருமை பெற்றன.

இத்துடன் ஆறுமுக நாவலாருக்குப் பின்னர் பெரிய புராணத்தினை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையிலே கதைப் பாங்கிலே வசன வடிவிலே அமைத்ததோடு நாவலரின் இரண்டாம் சைவவினா விடையினையும் இணைத்து ''திருத்தொண்டர் புராண வசனமும் இரண்டாம் சைவ வினா விடையும்'' எனும் நூலினை தனது எண்பத்து மூன்றாவது வயதிலே வெளியிட்டார்.

## நீத்தார் நயப்புரை

இவ்வாறு வாழ்நாள் பூராவும் சைவத் தமிழ் பணி புரிந்த பால பண்டிதர் சுப்பிரமணியம் 18.12.2008 அன்று இறை பரம்பொருள் பாதமடைந்தார். அன்னாரின் உயர்ந்த கருத்துக்களை அவரது நூல் மாணவர்கள் வாயிலாக அறிந்து அதன் உட்கிடைக்கைகளை உணர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

# புத்தக சாலை

## அலுவலக முகாமைத்துவம்




கலாநிதி திருமதி .ஜெயலட்சுமி இராசநாயகத்தால் எழுதப்பட்டுள்ள ''அலுவலக முகாமைத்துவம்'' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை இந்நூலில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

''அலுவலக நடைமுறை, அலுவலக அமைப்பு, செயல் திறன் அபிவிருத்தி, பணியாளர்களுடனும் பொது மக்களுடனும் உறவுகளைப் பேணல் உட்பட அலுவலக முகாமைத்துவத்தில் கவனிக்கத்தக்க பல அம்சங்களையும் இந்நூலில் விளக்கியுள்ளமை வரப்பிரசாதமாக அமையுமெனத் திடமாக நம்புகின்றேன்'' என்று மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அணிந்துரையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

## காசநோய் விளக்கம்




யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா எழுதியுள்ள ''காசநோய் விளக்கம்'' எனும் நூல் யாழ்.மாவட்ட காசநோய் தடுப்புச் சங்கத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.

காசநோய் என்றால் என்ன? அந்நோய் எவ்வாறு உருவாகிறது எனப் பல்வேறு வினாக்களைத் தொடுத்து அதற்கான விடைகளை மிகவும் விளக்கமான முறையில் எழுதி இந்நூலினை வெளியிட்டுள்ளார்.

காசநோய் தொடர்பான விடயங்களை அனைவரும் அறிந்து கொள்வதற்காக மிகவும் எளிய முறையில் இந் நூல் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மொத்தத்தில் இந்த ''காசநோய் விளக்கம்'' காசநோய் தொடர்பாக அனைவரும் விழிப்புப்பெற வேண்டுமென்பதே நோக்கம் என்றால் அது மிகையாகாது.

★ ★ ★

## பொருளாதார முறைமைகள்




கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியரும் பிரபல பொருளியல் பாட ஆசிரியருமான கருணாகரன் எழுதியுள்ள ''பொருளாதார முறைமைகள்'' நூல் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் வே.கருணாகரனின் 15 ஆவது தடவையாக வெளிவந்துள்ள இந்நூல் உலகில் ஏற்படும் விரைவான மாற்றங்களை உள்ளடக்கியதாகவும், பரீட்சையை நோக்காகக் கொண்டு மிகச்சிறந்த ஒழுங்கமைப்புடையதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழக சட்டத் துறை தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் தனது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கருணாகரனின் ஐம்பதாவது பொன்விழாக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு மட்டுமின்றி உயர்கல்வியைத் தொடருகின்ற மாணவர்களுக்கும் படித்துப் பயன்பெறக் கூடியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் நடத்திய ஊடக அறிவுப் போட்டி

### வினாக்களுக்கான விடைகள்

- ஈழநாடு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது யோகர் சுவாமிகள் வழங்கிய அருளுரை- ஏசுவார்கள், எரிப்பார்கள் உண்மை மையை எழுதுங்கள்.
- உலகில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வானொலி இலங்கை வானொலி, இதில் ஒலிபரப்பான பாடலைப் பாடியவர் கலையரசு சொர்ணலிங்கம்.
- இலங்கையில் பத்திரிகை ஆசிரியராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர் ஹென்றி மார்ட்டின்.
- பி.பி.சி. தமிழோசையை ஆரம்பித்தவர் திரு.சிவபாதசுந்தரம்.
- சீன வானொலியில் தமிழ்ச்சேவை 1962ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்தவர் மாதகல் கந்தசாமி.
- சுதேச நாட்டியம் பத்திரிகை 1902ஆம் ஆண்டு கல்லடி வேலனால் ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கையில் தொலைக்காட்சி சேவை ஆரம்பிப்பதற்கு நிதியுதவி வழங்கிய நாடு ஜப்பான்.
- காமினி நவரத்தினா என்ற சிங்களப் பத்திரிகையாளர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சற்றர்டே ரிவியூ பத்திரிகையை வெளியிட்டார்.
- தார்சி வித்தாச்சி என்ற பத்திரிகையாளர் அவசரகால நிலை 1958 என்ற நூலை எழுதியதற்காக நாடு கடத்தப்பட்டார்.
- உண்மை, அஞ்சாமை, நடுநிலைமை என்ற மகுடவாசகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை உதயன்.

பரிசு பெறுபவர்: **கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம், கந்தசாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

திகதி: நாளை(03.05.2009) ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஊடக வளங்கல் பயிற்சி மையம்,
ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 05 . 1920



மறைவு 12 . 05 . 2008

### அமரர் தம்பு இரட்ணலிங்கம்

(உரிமையாளர்-பொப்பியூலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்)
திதி: 02.05.2009

காலத்தைப் பொன்னாக கருதி கடமையை
கண்ணாக கருதி வாழ்ந்தீர்கள் ஐயா !
கண்ணை இமை காப்பது போல் எம்மை
காத்து வந்தீர்கள் ஐயா!
காலன் உங்களை அணுகாமல் காக்கும் சக்தியின்றிக்
காலமெல்லாம் கலங்குகின்றோம் ஐயா!
ஓராண்டு என்றாலென்ன எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்களை மறவோமையா!
எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்போடும் பண்போடும்
வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய எமது அருமைத் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(84765)


ஒருவாரகால முழுநேர கற்கைநெறி...
**Diploma in Computer Hardware Engineering**
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற,
சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப்பெற
உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சிநெறி
◆Assembling ◆Upgrading ◆Trouble Shooting
◆Fault Finding ◆Repairing ◆Servicing
◆Software Installation ◆Configuring Networking Etc.....
✓ பாடநெறியின் இறுதியில் கம்பூட்டர் தொடர்பான பூரண அறிவினை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
✓ எமது ஆய்வுகூடத்தில் கம்பூட்ரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம்செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை
✓ தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கபபடுகின்றது.
Free Installation CD
Course Fee : 2000/=
வகுப்புக்கள் ஆரம்பம்: 04/05/2009 -9AM
ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்
**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#167, Kasthuriyar Road, Jaffna.
Phone - 021 222 8250/ 0777222422


## சமய சந்திதிகளில்

யாழ்ப்பாணம், மே 2

கெருடாவில் தெற்கு கோட்டைச் சீமா முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

* * *

மீசாலை வடக்கு, வேம்பிராய் கலட்டிப் பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (204-207)

## வடமராட்சி வலய அதிபர்களுக்கான செயலமர்வு

வடமராட்சி, மே 2

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலை மேம்பாடு நிகழ்ச்சித் திட்டச் செயலமர்வு அடுத்தவாரம் இரு கட்டங்களாக புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம்கட்ட செயலமர்வு எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளிலும் இரண்டாம் கட்டச் செயலமர்வு 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளதாக வடமராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் தெரிவித்துள்ளார். (203-236)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் புதிய நடைமுறை

கரவெட்டி, மே.2

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்றுத் தொடக்கம் புதிய நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் வரையறை செய்யப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையின் நுழைவாயிலில் காவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும் நண்பகல் 12 மணி தொடக்கம் 1.30 மணி வரையும் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-70)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிய நோயாளர் விடுதி அமைப்பு

யாழ்ப்பாணம், மே.2

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சர்வதேச நிவாரண மற்றும் அபிவிருத்தி (ஐ.ஆர்.டி) நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்படும் நோயாளர் விடுதி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

100 அடி நீளம் கொண்ட இவ்விடுதி அடுத்த மாத நடுப்பகுதியில் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தினரால் 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இவ்விடுதிக்குரிய கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இதேவேளை வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நிர்வாக அலகு கட்டட வேலைகளும் துரிதகதியில் நடைபெறுவதால் இரண்டு மாதங்களில் இக்கட்டடத்தில் செயற்பாடுகள் ஆரம்பமாகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (203-207)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே.2

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைத்த பசார் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி கட்டம், கட்டமாகப் போடப்பட்டு வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை ஜே/78, ஆனைப்பந்தியடியிலும், நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஜே/79, இலுப்பையடிச் சந்தியிலும், பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணி வரை யாழ். நாவலர் வீதி சந்தி பழைய ரதக் கடையிலும் தடுப்பூசிகள் போடப்படவுள்ளன. (204)

## "ஞானச்சுடர்" சித்திரை மலர் வெளிவந்துள்ளது


யாழ்ப்பாணம், மே.2

செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற ''ஞானச்சுடர்'' சமய சஞ்சிகையின் சித்திரை மாதத்துக்குரிய மலர் வெளிவந்துள்ளது.

இம்முறையும் சைவசமயம்சார் கட்டுரைகள், கவிதைகள், செய்திகள், தமிழகத்தின் திருக்கோயில்கள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி ''ஞானச்சுடர்'' வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-236)

## 31ஆம் நாள் நினைவஞ்சலிகள்

மண் பெருமையுற 19 . 02 . 1930



விண் வரவேற்க 02 . 04 . 2009

### அமரர் நாகலிங்கம் அம்பிகைபாகன்

அம்பிகை பாகராய்- எம்
அனைவர்க்கும் உதவி நின்றீர்!
சென்றதெங்கே ஐயா! உமது
திருவடி நிழலில் என்றும்
நன்மைகள் செய்தோர் என்றும்
நலமொடும் வாழ்வீர் ஐயா!

எமது குடும்பத்தெய்வத்தின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்டும் மற்றும் தொலைபேசி மூலமும், தபால்கள் மூலமும் தொடர்பு கொண்டு எம் துயரத்தை பகிர்ந்து கொண்ட அன்புள்ளங்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

இன்று (02.05.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

மடத்தடி லேன்,
கோண்டாவில் மேற்கு. (84761)

தங்கள் பிரிவால் என்றும் வாடும்;
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் நடேசசுந்தரமூர்த்தி

தோற்றம்: 01.08.1950 மறைவு: 02.04.2009

அன்பும் பரிவும் காட்டி எம்மை வளர்த்துவிட்ட அண்ணாவே!
உயர்விலும் தாழ்விலும் ஒன்றாக இருந்தீர்களே!
பசுமையாய் நினைவுகள் கனக்குதையா!
பக்குவமாய் அழைக்கும் குரல் பரவசமாக்குதையா!
அமைதியாய் இறைபதம் சென்றுவிட்டீர்கள்!
ஆறாத்துயரில் நாம் அலைகின்றோம் அண்ணா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நடந்த 02.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குல விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (02.05.2009) சனிக்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

முருகன் பேக்கரி,
மந்திகை, புலோலி. (த.558271)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கான மாவட்ட எல்லே போட்டி தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

வலி.வடக்கு,மே2

யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினால் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு அணி சம்பியனாகியது.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 3 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தனர். முதல் இனிங்ஸில் விளையாடிய பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 2 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

இரண்டாவது இனிங்ஸில் ஓர் ஓட்டம் முன்னிலையில் நின்ற தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வீரர்கள் அனைவரும் ஆட்டமிழந்து மேலும் மூன்று ஓட்டங்களைப் பெற்று நான்கு ஓட்டங்கள் என்ற நிலையில் காணப்பட்டது.

5 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பருத்தித்துறை செயலக அணி வீரர்கள் மூன்று ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

ஆட்டநிறைவில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 6:5 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியை வென்று யாழ்.மாவட்டச் சம்பியனாகியது. (50-86)

# தீவகப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

வேலணை,மே2

தீவக வலயப் பாடசாலைகளிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றன.

வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**ஆண்கள்**

1ஆம் இடம் - புனித அந்தோனியார் கல்லூரி, 2ஆம் இடம் - நெடுந்தீவு ம.வி., 3ம் இடம் - காரை.கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

**பெண்கள்**

1ஆம் இடம் - சிறியபுஸ்பம் மகளிர் ம.வித்தி., 2ஆம் இடம் - நெடுந்தீவு ம.வி., 3ஆம் இடம் - வேலணை மேற்கு நடராசா வித்தி.

இப்போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)

# உடற்கல்வி ஆசிரியர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

வலி.வடக்கு,மே.2

யாழ்.மாவட்டத்தில் கட... உடற்கல்வி ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்கும் நோக்குடன் உடற்கல்வி ஆசிரியர்களினால் புதிய சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரியில் ப.தர்மகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இது தொடர்பான கூட்டத்தில் உடற்கல்வி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டதைத் தொடர்ந்து உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

இதில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் - ப.தர்மகுமாரன், உபதலைவர் - க.சசிக்குமாரன், செயலாளர் - ம.சசிக்குமார், உப செயலாளர் - செல்வி த.துஷியா, பொருளாளர் - ந.சுகந்தன், இதழ் ஆசிரியர்- ந.திலகராஜ் மற்றும் ச.ஸ்ரீரமணன், இ.ராதாகிருஷ்ணன், ம.பார்த்தீபன், ந.கனகராஜ், வி.ஜெயநேசன் ஆகியோரைக் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (50-86)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே.2

கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்காகக் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி காலிறுதி ஆட்டமொன்றில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்குக் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகமும் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (203-86)

★ ★ ★

வலி.வடக்கு,மே.2

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* உடுவில் பிரதேச செயலகம் எதிர் பருத்தித்துறை பிரதேச செயலகம்.
* சங்கானை பிரதேச செயலகம் எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலகம்.
* கரவெட்டி பிரதேச செயலகம் எதிர் காரைநகர் உ.அ.அ.
* ஊர்காவற்றுறை உ.அ.அ எதிர் நெடுந்தீவு உ.அ.அ
* கோப்பாய் பிரதேச செயலகம் எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்
* மருதங்கேணி உ.அ.அ எதிர் நல்லூர் பிரதேச செயலகம்.
* சாவகச்சேரி பிரதேச செயலகம் எதிர் வேலணை பிரதேச செயலகம்

இரண்டாம் சுற்றில் இருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (203-86)

# 19 வயதுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்; சம்பியன் வென்றது தெல்லிப்பழை யூனியன்

வலி.வடக்கு,மே.2

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டபோதிலும் யூனியன் கல்லூரியின் ஆதிக்கம் போட்டி முடிவடையும் வரை மோலோங்கி நின்றது.

போட்டி நிறைவில் யூனியன் கல்லூரி 39:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் இந்துக்கல்லூரியை வெ[illegible] பெற்று யாழ்.மாவட்டச் சம்பியனா[illegible]

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்ற அணி சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் மோதிக்கொண்ட போதிலும் ஆட்ட நிறைவில் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை 13:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# அரச அதிபர் கிண்ணத் துடுப்பாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மே.2

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் அரச சேவையில் பொன்விழாவை அண்மித்துக் கொண்டிருப்பதை முன்னிட்டு அவரைக் கௌரவிக்கும் முகமாக யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்தும் 'அரச அதிபர் கிண்ணம் - 2009'க்கான துடுப்பாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை புங்கங்குளம் சந்திக்கு அண்மையிலுள்ள அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வை யாழ்.அரச அதிபர் ஆரம்பித்துவைப்பார். (50)

# யாழ்.வலயப் பாடசாலைகளின் குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு,மே2

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான குழுநிலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**எல்லே**

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம், யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம்**

*15 வயதின் கீழ்* - ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

*17 வயதுப் பிரிவு* - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம், திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு* - நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்**

*15 வயதுப் பிரிவு* - புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி.

*17 வயதுப் பிரிவு* - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை.

*19 வயதுப் பிரிவு* - கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

**கரம்**

*15 வயதுப் பிரிவு* - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.திரேசா மகளிர் வித்தியாலயம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு* - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி.

**மேசைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**சதுரங்கம்**

*15 வயதுப் பிரிவு* - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு* - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. (1-86)



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் தலைமையுரையைப் பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் நிகழ்த்துவதையும் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கும், சிறந்த தடகள விளையாட்டு வீரனாகத் தெரிவுசெய்யப்பட்ட இணுவில் இந்து விளையாட்டுக் கழக வீரன் எஸ்.யசோதரனுக்கும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் வெற்றிக்கிண்ணங்களை வழங்குவதையும், வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலாக இணையம் வழியாக

# வியாபார முதுமாணிக் கற்கைநெறி




யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் ONLINE மூலமான முதலாவது கற்கைநெறியே வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறியாகும். இது முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் நடத்தப்படவிருக்கும் வெளிவாரி மாணவர்களுக் கான கற்கைநெறியாகும். பல்கலைக் கழகங்களினால் நடாத்தப்படும் வெளிவாரிக் கற்கை நெறிகள் அனைத்தும் தொலைக்கல்வி என்ற புதிய நோக்கிலான கல்விமுறையை சார்ந்ததாகும்.

**தொலைக்கல்வி என்றால் என்ன?**

தொலைக்கல்வி(Distance Education or distance leaning) என்பது ஒரு வகையான வெளிவாரிக் கல்வி முறையாகும். இது மரபுரீதியான கல்வி முறையிலிருந்து வேறு பட்டதாகவும் அவற்றின் தற்போதைய ஒழுங்குமுறைகள், விதிமுறைகளின் தாக்கத்திலிருந்து விலகி கல்வி செய்முறைக்கு புதிய அறிமுகத்தை அளிக்கின்ற ஒரு கல்விச் செயற்பாடாகும். வகுப்பறையினுள்ளே கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்கின்ற ஒரு முறைமையே மரபுரீதியான கல்விச் செயற்பாடு எனப்படுகின்றது. இங்கு கல் விச்செயற்பாடானது வாய்மொழி மூலமான தொடர்புகளினூடாகவும், ஆசிரியரும் மாணவரும் நேருக்கு நேர் சந்திப்பதனூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. மறு வார்த்தையில் கூறின், ஆசிரியரும் மாணவரும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தொடர்ச்சியாக சந்தித்து கல்விச் செயற்பாட்டை மேற்கொள்கின்ற ஒரு நிலமை ஆகும். உதாரணமாக, இன்று எல்லா பாடசாலைகளிலும்,அநேகமான பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற கல்விச்செயற்பாட்டைக் குறிப்பிடலாம்.

தொலைக்கல்விக்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை அளித்துள்ளனர். எனினும், தொலைக் கல்வி என்பது ஒரு நிறுவன ரீதியான அம்சமாகும். இது பல்வேறு வகையான கற்றல்,கற்பித்தல் தந்திரோபாயங்களை உள்ளடக்குகிறது. இதனடிப்படையில் இது தபால் மூலக்கல்வி (Correspondence Eduacation) மனைக்கற்கை (Home Study) வெளிவாரிக்கற்கை (External Study) எனவும் குறிப்பிடப்படுகிறது.

முறைசார்ந்த கல்வி போலன்றி தொலைக்கல்வி முதலில் மாணவர்களின் தேவைகள், வசதிகள் என்பவற்றையும் கவனத்தில் கொண்டதாயிருக்கும். பின்னரே நிறுவன ரீதியான அம்சங்களில் கவனம் செலுத்தும். இதனை நேரில் கல்வி எனவும் குறிப்பிடலாம். நேர்கல்வியானது நேருக்கு நேரான தொடர்பாடலைக் (Face to Face Communication) கொண்டிருக்கிறது. எனவேதான் தொலைக்கல்வி நேரில் கல்வி எனப்படுகிறது. தொலைக்கல்வியா னது கல்வியை வழங்கக்கூடிய எல்லா தொலை தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தும். எனவே இதனைத் திறந்த கல்வி முறை (Open Education) எனவும் குறிப்பிடலாம்.

**2.0 தபால் மூலக்கல்விக்கும்,திறந்த கல்விக்குமிடையேயான வேறுபாடு**

தபால் மூலக் கல்வி, தொலைக் கல்வி, திறந்த கல்வி எனும் பதங்கள் எமக்கு முரண்பாடுகளை ஏற்படுத்துவதனால் இவற்றை நாம் விளங்கிக்கொள்ளல் அவசியம். தபால் மூலக்கல்வி எனப்படுவது மரபுரீதியான கல்விமுறை போன்று அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புக்களை தபால் மூலம் விநியோகிப்பதன் மூலம் அளிக்கப்படுகின்ற கல்வி முறையாகும். தொலைக் கல்வி எனப்படுவது மரபுரீதியற்ற புதிய முறையிலான கல்வி யைக் குறிக்கின்றது. இங்கு எல்லா தொலைத்தொடர்பு சாதனங்களும் பயன்படுத்தப்படலாம். தபால் மூலமும் இவற்றில் ஒன்றாக இருக்கலாம். தபால் மூலக்கல்விக்கும், தொலைக்கல்விக்குமிடையேயான முக்கிய வேறுபாடு யாதெனில்,தொலைக்கல்வியில் தொடர்பு கொள்ளலுக்கான உயர் தந்திரோபாயங்களும், தொழினுட்பங்களும் பின்பற்றப்படுகின்றமையாகும். திறந்த கல்விமுறையானது மரபுரீதியற்ற கல்வி முறையாகும். இது மரபுரீதியான கல்விச்செயற்பாட்டு வரையறைகளிலிருந்து (பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்) விலகுகிறது. இது தாராளக் கல்வி முறைமை எனப்படுகின்றது. தொலைக்கல்விக்கும், திறந்த கல்விக்கும் இடையேயான தொடர்பு யாதெனில் திறந்த கல்விக்கு தொலைக் கல்வியே மிக உதவியாக அமைகிறது. திறந்த கல்விமுறையில் அனுமதிக்கான வரையறைகள் வரவு அனுமதிக்கான வரையறைகள், வரவு, பரீட்சைக்காலம், பாடசேர்க்கை வகைகள், தொடர்புகொள்ளும் வழிமுறைகள் எவற்றிலும் வரையறைகள் காணப்படமாட்டாது என்பதனால் தொலைக் கல்வியும், திறந்தகல்வியும் ஒரே கருத்தில் பயன்படுத்தப்படலாம்.

**தொலைக்கல்வியின் பிரதான அம்சங்கள்:**

* ஆசிரியரும் மாணவரும் ஒருவரிடமிருந்து இன்னொருவர் வேறுபடுத்தப்பட்டிருப்பர். அதாவது ஆசிரியர் ஓரிடத்திலும், மாணவர் இன்னொரு பிரதேசத்திலோ அல்லது நாட்டிலேயோ இருப்பர். இதுவே இக்கல்வி முறைமையின் பிரதான அம்சமாகும்.
* தொலைக்கல்வி பல்வேறு உயர் தொழிநுட்ப தொடர்பாடல் சாதனங்களை உபயோகிக்கின்றது. குறிப்பாக அச்சடித்த பாடக்குறிப்புக்களுடன், தொலைபேசி, ஓடியோ, வீடியோ நாடாக்கள், ஒலி, ஒளிபரப்புக்கள், கணனி என்பன தொலைக்கல்வியில் பயன்படுத்தப்படுகின்றன.
* இருவழித் தொடர்பாடல் இங்கு பிரதானமானது. மாணவர்கள் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளினூடாக பதிலளிக்க முடிவதாலும்,ஏனைய தொடர்பு சாதனங்களினூடாக தொடர்புகொள்ள முடிவதாலும் பின்னூட்டியற் பெற்றுக் கொள்ளமுடியும்.

ரதிராணி யோகேந்திரராஜா
இணைப்பாளர் (வியாபார முகாமைத்துவமாணிகற்கைநெறி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

* கற்போர் தமது சக மாணவர்களிடம் இருந்து வேறுபடுத்தப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தனித்தனியாகவே கற்க வேண்டியுள்ளது. இவர்கள் நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு மிக அரிதே. எனினும், குழு வாகச் சந்திக்கும் வாய்ப்புக்களை இவர்கள் தாமாகவே ஏற்படுத்திக்கொள்ளலாம். எனினும்,மாணவர்கள் தாமாகவே தமது சுய கற்றல் மூலமே கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.
* தொலைக்கல்வி ஒரு விசேட தேவைக்கு உருவாக்கப்பட்ட ஒரு விசேடமான பதமாகும். சமூகமானது விருத்தி செய்யப்பட அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் கல்விச் செயற்பாடும் விருத்தி செய்யப்படல் வேண்டும். அவற்றினடிப்படையில் விருத்திசெய்யப்பட்ட ஒரு செயற்திட்டமே. Online மூலமான தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டமாகும்.
* தொலைக்கல்வியானது நேருக்கு நேரான தொடர்பைக் கொண்டிராவிடினும் ஏதோ ஒரு சந்தர்பத்தில் குறிப்பாக பரீட்சை வேளைகளில் பௌதீக ரீதியான தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது. எனவே, இது கலப்புக் கல்வி முறையாகக் (hybrid or blended Course of study) காணப்படுகிறது.

(தொடரும்)


## தவறிவிட்டது

கோவிந்தசாமி நந்திசிவம் (722083857V - முகவரி - சாவகச்சேரி), கந்தையா கலைச்செல்வி (815763521V) ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், வங்கிக்கடன் அட்டைகள், கோணாவளை, கொக்குவில் என்னும் முகவரியை உடைய வங்கி அடையாள அட்டைகள் ஆகியன அடங்கிய கைப்பை ஒன்று கொக்குவிலில் இருந்து வட்டுக்கோட்டைக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது.

இதனைக் கண்டெடுத்தவர்கள் ஹற்றன் நஷனல் வங்கியின் எந்தக் கிளையிலாவது ஒப்படைத்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 060 221 8699, 0715334017


## மரண அறிவித்தல்

### மனவல் அந்தோனிப்பிள்ளை (அன்ரன்)



யாழ்.குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனவல் அந்தோனிப்பிள்ளை நேற்று (01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனவல் - விசிற்றம்மா தம்பதியினரின் அன்பு மகனும், மெற்றில்டாவின் அன்புக் கணவரும் சென்செபஸ்ரியன் (நடத்துநர், இ.போ.ச. ), சகாயமேரி (செல்லம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மரியசுகந்தியின் (நாவற்குழி) அன்பு மாமனும், செலஸ்ரினின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (02.05.2009) சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

22A, கடற்கரை வீதி,
குருநகர். 0774911355.

தகவல்: சென்.செபஸ்ரியன் (மகன்)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

திருமதி
### மகாலிங்கம் பவளராணி



கடந்த 02.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி மகாலிங்கம் பவளராணி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.05.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறவிருப்பதால், இந்நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு: 07.12.1956
உதிர்வு: 02.04.2009

கணேஸ்வரம், அளவெட்டி.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## தொண்டர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே.2

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஏற்பாட்டில் தொண்டர்கள் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(204)

## சைவபரிபாலன சபையின் பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே.2

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாவலர் சோலை முன்பள்ளியில் கற்கும் சிறார்களுக்கு தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப்போட்டியில் பரிசு பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

பேச்சு - தமிழ்

துஷாயினி முரளிதரன், பிரணவி இராஜேஸ்வரன், லவன் நிலவன்.

பேச்சு - ஆங்கிலம்

துஷாயினி முரளிதரன், பிரணவி இராஜேஸ்வரன், லவன் நிலவன்.

ஆத்திசூடி - வயது 4

சிவராசா டினோஜன், சுப்பிரமணியம் தனுஸ்ராஜா, பிரியங்கா மதனதாஸ்.

ஆத்திசூடி - வயது 3

மேகலா நகுலேஸ்வரன், சங்கரி சிவராசா.

(204)


**தேவை** போட்டோப் பிரதி நிறுவனத்திற்கு பெண்கள் தேவை. பழகுபவர்களும் சமுகம் [illegible] சனி, ஞாயிறு 02.05.2009, 03.05.2009 காலை 9 மணி - 4 மணிவரை நேரில் வரவும். [illegible]
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். T.P:2223871


## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (J.P)

(Retired Auditor Dept. of Internal Audit, Ministry of Justice, former Member of Municipal Council, Jaffna)



இளவாலை மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 28.04.2009 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் புலோறன்ஸ் புஸ்பம் அவர்களின் அன்புக்கணவரும் அருட்பணி லொயிட் சாந்திக்குமார் (திருவுளப் பணியாளர் சபை - Project officer National Institute of Education, Maharagama), அன்ரனெட் வனஜா (UK), றஞ்சிதகுமார் (Germany), பேராசிரியை ஆன் கிரிஜா (USA) ரவிக்குமார் (UK), Dr.சுரேந்திரக்குமார் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இம்மானுவேல் (பபா), லோஜா, வத்சலா, சிரானி ஆகியோரின் அன்பு மாமனாரும் இராயப்பு, மரியம்மா, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 04.05.2009 திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும். குறிப்பு: காலை 6 மணிக்கு யாழ் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

T.P No:0777356726, 0602501752
St.Joseph church,
Grandpass, Colombo 14.

தகவல்: குடும்பத்தினர்

### மேரி ஸ்ரெலா வேலாயுதபிள்ளை (ரூபி)

(ஓய்வு பெற்ற தாதி)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மேரி ஸ்ரெலா வேலாயுதபிள்ளை நேற்று (01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் Dr. கந்தையா வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் Dr. ஜெகரூபன் (கொழும்பு), Dr. றமேஸ்குமார் (கம்பளை) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜனீத்ரா, Dr. சகீதா (பொத்துவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வைஸ்ணவி, கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2009) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"வேல் வைத்தியசாலை"
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

தகவல்: Dr. க.வேலாயுதபிள்ளை, (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்கு எதிரான போருக்கு சோனியாவின் வன்மமே காரணம்!

## பா.ஜ.கவின் மாநிலத் துணைத் தலைவர் குற்றச்சாட்டு

சென்னை, மே 02

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடக்கும் போருக்கு சோனியாவின் தனிப்பட்ட வன்மமே காரணம். இதனை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்றும், தனித் தமிழ் ஈழத்தை பா.ஜ.க. ஆதரிக்கவில்லை என்றும் அக்கட்சியின் மாநில துணைத் தலைவர் எச்.ராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் தனித் தமிழ் ஈழம் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை பா.ஜ.க. ஏற்கவில்லை. ஒருநாடு பிளவுபட வேண்டும் என்று மற்றொரு நாடு கூறமுடியாது.

ஆனால் பிரபாகரனைக் காரணம் காட்டி அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை ஏற்க முடியாது. இலங்கைக்கு ஆயுதம் கொடுக்கவும் மாட்டோம். விற்கவும் மாட்டோம் என்று வாஜ்பாய் அறிவித்தா...

காங்கிரஸ் அரசு வாஜ்பாய் அரசின் முடிவை மீறி இலங்கைக்கு ஆயுதம் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது. இந்திய அரசின் உதவியுடன்தான் இலங்கையில் போர் நடக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடக்கும் போருக்கு சோனியாவின் தனிப்பட்ட வன்மமே காரணம். இதனை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கம் இந்திய அரசுக்கு எதிராகவோ, இந்திய மக்களுக்கு எதிராகவோ பேசவில்லை. இலங்கைப் பிரச்சினையை இந்தியாவால் மட்டுமே தீர்க்க முடியும் என்ற ஆதங்கத்தில்தான் அங்கு நடப்பவை பற்றிப் பேசினார்.

அரச பஸ்களில் எவ்வித அறிவிப்புமின்றி கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் விதிகளை மீறிய செயலாகும். இதுபற்றி தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தி.மு.க., அ.தி.மு.க. போன்ற கட்சிகளின் துணையில்லாமல் முதன்முறையாக பா.ஜ.க. தமிழகத்தில் வெற்றி பெறும் - என்றார்.

# புலிகளின் ஊடுருவலைத் தடுக்க இந்தியக் கடலில் 6 கப்பல்கள்

இராமேஸ்வரம், மே2.

விடுதலைப் புலிகள் முல்லைத்தீவிலிருந்து கடல் மார்க்கமாக யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வழியாக இந்தியாவுக்கு தப்பிவர வாய்ப்புள்ளது என்றும், அவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு இந்தியக் கடல் பகுதியில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த டி-68 பாரடாங் கப்பல் பாக் ஜலசந்தி பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கடலோரக் காவல்படையைச் சேர்ந்த கப்பல்கள் நாயகிதேவி, கிட்டூர் ராணி சென்னம்மா மற்றும் இன்னொரு கப்பல் தூத்துக்குடி முதல் நாகப்பட்டினம் பகுதியிலும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

மேலும், 2 ஹோவர் கிராப்ட்கள், 2 அதிவேக கப்பல்கள், 10 அதிவேக ரோந்துப் படகுகள் என்பனவும் ரோந்து சுற்றி வருகின்றன. உச்சிப்புளியிலிருந்து 2 ஹெலிகொப்டர்கள், ஐ.என்.எஸ். பருந்து விமானமும் கடல் பகுதியில் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில் -

இராமேஸ்வரம் கடல் வழியாக அகதிகள் வருகை பெருமளவு குறைந்துள்ளது. கடல் பகுதி முழுவதும் பாதுகாப்பு வலயத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால், புலிகள் ஊடுருவுவதற்கு வாய்ப்பு இல்லை - என்றார்.

# கச்சதீவை மீட்பேன்!

## ஈழத் தமிழர் மறுவாழ்வுக்கு ரூ. 10 கோடி; ஜெ. உறுதி



பட்டினம், மே 02

இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு 10 கோடி ரூபா மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளதால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்குள்ளாகின்றனர். எனவே, மீனவர்களின் நலனுக்காக கச்சதீவை மீட்பேன் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா உறுதி கூறியுள்ளார்.

நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசார பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு -

கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த மத்திய காங்கிரஸ் அரசு மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை.

மீனவர்களின் நலனுக்காக கச்சதீவை மீட்பேன். நாகை பகுதியில் ஏராளமான மீனவர்கள் வசித்து வருகின்றனர்.

கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. இதனால் நமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளேன். அதைத் தொடர்ந்து நடத்தி, வெற்றியும் பெற்று கச்ச தீவை மீட்பேன் - என்றார்.

# 3 ஆவது கட்டத் தேர்தலில் 50 சதவீத வாக்குப் பதிவு

புதுடில்லி, மே 02

மக்களவைக்கு 3ஆவது கட்டமாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் சராசரியாக 50 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓரிரு மோதல் சம்பவங்களைத் தவிர அமைதியாக தேர்தல் நடைபெற்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்றாவது கட்டமாக 9 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் 107 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி (ராய் பரேலி), பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி (காந்திநகர், குஜராத்), முன்னாள் பிரதமர் தேவகௌடா, ஐக்கிய ஜனதா தளத் தலைவர் சரத் யாதவ், கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.பங்காரப்பா உள்ளிட்டோர் 3ஆவ்து கட்டத் தேர்தலில் களத்திலுள்ள முக்கிய வேட்பாளர்களாவர்.

கடந்த வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணியுடன் முடிவுற்றது. வதைக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் வாக்களித்தனர். சில இடங்களில் பகலில் வாக்குச் சாவடிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

பா.ஜ.க. தலைவர் அத்வானி, தனது மனைவி கமலாவுடன் குஜராத் மாநிலம், ஆமதாபாதில் உள்ள ஷாபூர் வாக்குச்சாவடியில் வாக்களித்தார். உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி, லக்னெவில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

பீகாரில் கட்டிஹார் மாவட்டத்தில் மோங்ராவில் உள்ள வாக்குச்சாவடியில் இரு வேட்பாளர்களின் ஆதரவாளர்களிடையே மோதல் ஏற்பட்டு கல்வீச்சில் ஈடுபட்டனர். இதில் மூன்று பொலிஸார் காயமடைந்தனர்.

மக்களவைத் தேர்தலுடன் சிக்கிம் மாநில சட்டப்பேரவைக்கு மொத்தம் உள்ள 32 தொகுதிகளுக்கும் நேற்றுமுன்தினம் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. மதியம் 2 மணி வரை 45 சதவீத வாக்குகள் பதிவாகின எனக் கூறப்படுகிறது.

# சோனியா, கருணாநிதி ஒரே மேடையில் புதனன்று சென்னையில் தேர்தல் பிரசாரம்



சென்னை, மே. 02

சென்னை தீவுத்திடலில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறும் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் சோனியா காந்தி, முதல்வர் கருணாநிதி ஆகியோர் ஒரேமேடையில் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தியா முழுவதும் 5 கட்டமாகத் தேர் தல் நடைபெறுகிறது. இவற்றில் 3ஆம் கட்டத் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. 4ஆவது கட்ட தேர்தல் மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், கர்நாடகா உட்பட பல மாநிலங்களில் 7ஆம் திகதி நடைபெறுகிறது. 5ஆவது கட்டமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 13ஆம் திகதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தல் பிரசாரம் தற்போது சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. இந்தியாவில் தமிழ் நாட்டில் தீவிரவாதிகளின் மிரட்டல் இருப்பதால் தேர்தல் பிரசாரத்திற்கு சோனியா காந்தி வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது எனச் சொல்லப்படுகிறது.



ஆனால் தமிழ்நாடு புதுச்சேரியில் எப்படியும் தேர்தல் பிரசாரம் செய்தே தீருவேன் என்று சோனியாகாந்தி முடிவு எடுத்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் புதன்கிழமை புதுச்சேரி மற்றும் சென்னையில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சோனியாகாந்தி கலந்து கொண்டு பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை தீவுத் திடலில் பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பொதுக்கூட்டத்தில் ஒரே மேடையில் சோனியா காந்தி, முதல்வர் கருணாநிதி ஆகியோர் பேசுவார்கள் என்று தெரிகிறது.

சோனியாகாந்தியுடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ ராகுல்காந்தியும் தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் செய்ய வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல், தமிழகத்தில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் அத்வானி, ராஜ்நாத்சிங், குஜராத் முதல்வர் நரேந்திரமோடி ஆகியோரும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர்.




மும்பையில் உள்ள மக்களவைத் தொகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் தேர்தல் நடந்தது. ஹிந்தி நடிகர்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். வாக்குச்சாவடியில் இருந்து வெளியே வந்த ஐஸ்வர்யா ராய், அமிதாப் பச்சன், அபிஷேக் பச்சன் ஆகியோர் தங்கள் நடுவிரலில் அழியாத அடையாள மை வைக்கப்பட்டிருப்பதை காண்பிக்கின்றனர். அடுத்த படம்; வாக்குச்சாவடி முன் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கிறார் ஷாருக்கான்.

# போர் நிறுத்தம் பொய் என்று வதந்தியைப் பரப்புகின்றனர்

## குலாம்நபி ஆசாத் பேட்டி

அரசியல் காரணத்துக்காக இலங்கைப் போர் நிறுத்தம் பொய் என வதந்தி பரப்புகின்றனர் - என்று காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் குலாம்நபி ஆசாத் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் போர் நிறுத்த அறிவிப்பு பொய்யானது என்றும், தாக்குதல் தொடர்கிறது எனவும் கூறுகின்றனர். இது அரசியல் காரணத்துக்காக பரப்பப்படும் வதந்தி. இலங்கையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும், பாதுகாப்புப் பகுதியில் நிவாரண உதவிகள் கிடைக்கவும் காங்கிரஸும், தி.மு.க. அரசும் கவனம் செலுத்துகின்றன. தனி ஈழம் அமைக்க இங்கிருந்து இராணுவத்தை அனுப்புவேன் என ஜெயலலிதா கூறியுள்ளார். மற்றொரு நாட்டுக்கு இராணுவத்தை அனுப்ப முடியுமா? - என்றார்.'

# கலைஞரும் மஹிந்தவும் சதித்திட்டமா? ஜெ.யின் பேச்சை மக்கள் நம்பமாட்டார்கள்

## அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேட்டி

வேலூர், மே. 02

கருணாநிதியும் மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து சதித் திட்டம் தீட்டினகர் என ஜெயலலிதா கூறியதை மக்கள் யாரும் நம்ப மாட்டார்கள் - என்று அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை வேலூரில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு-

கே - நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றிவாய்ப்பு எப்படி இருக்கிறது?

ப - தி.மு.க. கூட்டணிக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஜெயலலிதா பேச்சை மக்கள் நம்பமாட்டார்கள்.

கே - நாமக்கல்லில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா பேசும்போது, தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக கருணாநிதியும் இலங்கை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும் இணைந்து சதித் திட்டம் தீட்டியுள்ளனர் எனக் கூறியிருக்கிறாரே?

ப - ஜெயலலிதாவின் பேச்சை மக்கள் யாரும் நம்ப மாட்டார்கள்.

கே - முதல்வரின் உண்ணாவிரதத்தால் இலங்கையில் உண்மையிலேயே போர் நிறுத்தம் ஏற்பட்டு உள்ளதா?

ப - அப்படித்தான் நாங்கள் நம்புகிறோம்.

கே - தேர்தலுக்கு பின்னர் 3ஆவது அணியில் பல்வேறு கட்சிகள் இணைந்துவிடும், அதையடுத்து மத்தியில் 3ஆவது அணி ஆட்சியமைக்கும் என்று இடதுசாரிகளின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் கூறியிருக்கிறாரே?

ப - அது தேர்தலுக்குப் பின்னர் பேச வேண்டிய விடயம் - என்றார்.

# புலிகள் பற்றி ஜெயலலிதாவின் நிலை என்ன? விளக்கமளிக்கக் கோருகிறார் திருமாவளவன்

அரியலூர், மே2

புலிகளைப் பயங்கர வாதிகள் என்றும், பிரபாகரனை இந்தியா கொண்டு வந்து தண்டிக்க வேண்டும் என்றும் பேசிய ஜெயலலிதா, இப்போது வாக்குக்காக தனி ஈழம் என்கிறார். புலிகள் பற்றி தன்னுடைய நிலைப்பாடு என்ன என்பதை அவர் விளக்க வேண்டும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அரியலூரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குஅளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையில் போர் நிறுத்தம் முழுமையாக நடைபெற மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். டில்லியில் புதிய ஆட்சி அமைந்த பின்னர் இந்திய இராணுவ உதவியுடன் தனி ஈழம் அமைக்கப்படும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். இது தேர்தலுக்காக பேசப்பட்ட பேச்சு.



தனி ஈழத்திற்கு எதிரான கொள்கை உடையவர் ஜெயலலிதா. புலிகளைப் பயங்கரவாதி என்றும், பிரபாகரனை இந்தியா கொண்டு வந்து தண்டிக்க வேண்டும் என்றும் பேசிய ஜெயலலிதா, இப்போது வாக்குக்காக தனி ஈழம் என்கிறார்.

புலிகள் பற்றி அவருடைய நிலை என்ன என்பதை ஜெயலலிதா விளக்க வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதாவின் பேச்சால் தி.மு.க. கூட்டணியின் வெற்றி வாய்ப்பு பாதிக்காது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை கட்டிக்காப்பதில் ஈரான் முன்னிலை வகிக்கிறதாம்

## அமெ. ராஜாங்க திணைக்களம் அறிக்கை

வாஷிங்டன், மே 02

''உலகில் பயங்கரவாதத்தைத் தட்டி எழுப்புவதில் ஈரானே அதிமுக்கிய நாடாகத் திகழ்கிறது. அது பயங்கரவாதத்தைத் தட்டி எழுப்பியும், கட்டிக் காத்தும் வருகிறது. இதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன'' என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், அதன் வருடாந்த அறிக்கையில் பகிரங்கப்படுத்தியுள்ளது.

''மத்திய கிழக்கில் திட்டமிடப்பட்டு பயங்கரவாத நடவடிக்கைகள் கட்டவிழ்க்கப்படுகின்றன. ஆப்கானில் மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதான ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. இந்த சதித் திட்டங்களில் ஈரானின் பங்களிப்பு உச்சமட்டத்தில் உள்ளது'' என்றும் மேற்படி திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

''அமெரிக்காவுக்கும், மேற்கத்தேய நாடுகளுக்கும் அல்-குவைதா தொடர்ந்தும் பாரிய அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. அல்-குவைதா தீவிரவாதிகளும், ஆப்கானிய தலிபான் தீவிரவாதிகளும் பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியங்களுக்குள் ஊடுருவி, அந்நாட்டையும் பாழ்படுத்தி வருகிறார்கள்'' என்றும் அது விவரித்துள்ளது.

''பாகிஸ்தானில் பயங்கரவாதத் தா[illegible]தல்கள் அதிகரித்துள்ளன. ஆண்கள், பெ[illegible]கள், பிள்ளைகள் ஆகிய அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். இரத்தக்களரிகளுக்குப் பரவலாக வித்திடப்பட்டு வருகிறது. அந்நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, கட்டுக்கோப்பு ஆகியவற்றிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது'' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

''லெபனான், ஈராக், ஆப்கானிஸ்தான், பலஸ்தீன எல்லைகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதான ஊக்குவிப்பு முயற்சிகள் குழப்பியடிக்கப்படுகின்றன. பொருளாதார ஸ்திரப்பாட்டுக்கான நடவடிக்கைகளுக்கும் இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. ஜனநாயக மலர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போடப்படுகிறது. இந்த சதிகார நடவடிக்கைகளில் ஈரானின் தலையீடே மேலோங்கியுள்ளது'' என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

''ஈரானிய புரட்சிகரக் காவல் படையின் துணைப்படை மூலமாகவே ஈரான் பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவித்தும் முடுக்கியும் வருகிறது. வெளிநாடுகளிலுள்ள பயங்கரவாதக் குழுக்களுக்கும் உதவி வருகிறது. இதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன'' என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### ஈரான் நிராகரிப்பு

இந்த அறிக்கையை ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மனோச்சீர் மொட்டாகி நிராகரித்துள்ளார். ''அமெரிக்கா தனது இரட்டை வேடத்தை மூடிமறைக்கும் எத்தனத்தில் தற்போது ஈடுபட்டு வருகிறது. அதன் பிரதிபலிப்புகளில் ஒன்றே இந்த கபடத்தனமான அறிக்கை'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அபு கிரைப் தடுப்பு முகாமிலும், குவாண்டனாமோ தடுப்பு முகாமிலும் அமெரிக்கா கட்டவிழ்த்து வந்த கொடுமைகள், குரூர சித்திரவதைகள், மனித உரிமைகளுக்கும், மனிதாபிமானத்துக்கும் எதிரான காரியங்கள் ஆகியவை அம்பலமாகியுள்ளமையை நாம் அறிவோம். முழு உலகமும் அறியும். இந்நிலையில் மற்றோர் மீது குற்றஞ்சுமத்த அமெரிக்காவுக்கு உரிமையும் இல்லை. அதற்கான அருகதையும் கிடையாது'' என்றும் ஈரானிய அமைச்சர் சாடியுள்ளார்.

# பாகிஸ்தானில் இனக் கலவரம் இரண்டு நாள்களில் 26 பேர் பலி

கராச்சி, மே 02

பாகிஸ்தான் கராச்சி நகரில் உருது பேசும் மக்களுக்கும், பஸ்தூன் இன மக்களுக்குமிடையே தொடர்ந்து கலவரம் நடந்து வருகிறது. கடந்த 2 நாள்கள் நடந்த மோதலில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பல இடங்களில் வியாழக்கிழமை இரவும் மோதல்கள் நடந்தன. ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டனர். பலர் அரிவாளாலும் வெட்டப்பட்டனர். இதில் மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தக் கலவரத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

கலவரத்தை அடக்க 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் கராச்சி நகரில் குவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய நகரங்களிலுமிருந்து பொலிஸார் கராச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பெருந்தொகையான பொலிஸார் வாகனங்களில் ரோந்து சுற்றி வருகின்றனர்.

எனினும் கராச்சியில் ஆங்காங்கே கலவரம், தீ வைப்பு சம்பவங்கள் ஆகியவை தொடர்கின்றன.

# நெதர்லாந்து ராணியின் ஊர்வலத்தில் வேகமாக வந்த காரில் மோதி ஐவர் பலி



ஆம்ஸ்டர்டாம், மே 02

நெதர்லாந்து இராணி பியாட்ரிக்ஸின் 71 ஆவது பிறந்த தின வைபவ ஊர்வலத்தில் நபர் ஒருவர் தான் வேகமாக செலுத்தி வந்த காரை மோதினார். இதில் ஐவர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். அந்நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்.

இராணி பியாட்ரிக்ஸின் பிறந்த நாளையொட்டி அபெல்டூம் நகரில் ஊர்வலம் இடம்பெற்றது. இராணியும் அவரது குடும்பத்தினரும் திறந்த வாகனத்தில் அமர்ந்து உலா வந்தனர்.

ஊர்வலத்தைப் பார்க்க வீதியின் இருமருங்கிலும் பெருந்தொகையானோர் வெகு உற்சாகத்துடன் திரண்டிருந்தனர். அச்சமயம் வேகமாக காரோட்டி வந்த ஒரு நபர், காரை இராணி வந்த வாகனத்தில் மோத முயன்றார்.

இராணி அமர்ந்து வந்த வாகனத்துக்கருகே பல இடங்களில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. கார் அவற்றின் மீது மோதியது. அதனால், அக்காரால் அவ்விடத்தைத் தாண்டிச் செல்ல முடியவில்லை.

இதனால் இராணியும் குடும்பத்தினரும் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர். எனினும், இராணியைப் பார்க்க வீதியில் நின்றிருந்தவர்களில் ஐவர் வேகமாக வந்து திரும்பிய காரால் மோதுண்டு உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

கார் தடுப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளானதில், அதைச் செலுத்தி வந்த நபர் படுகாயமடைந்தார். அவர் சமீபத்தில் வேலை இழந்தவர். இந்த விரக்தியால் இராணியை கொல்ல முயன்றுள்ளார் என்ற



விவரங்கள் விசாரணையில் வெளியாகின.

''38 வயதான இந்நபர் உயிராபத்துக்கு ஏதுவான காயங்களுக்குள்ளாகியுள்ளார். இவர் ஒரு டச்சுப் பிரஜை. அரச குடும்பத்தைத் தாக்க முயன்றமை, கொலை செய்ய முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்படவுள்ளன'' என அரச வழக்குத் தொடுநர் லுடோ கூகென்ஸ் தெரிவித்தார். எனினும் இதற்குப் பின்னர் சொற்ப நேரத்தில் இந்நபர் மருத்துவமனையில் மரணமானார்




கம்போடியாவின் தலைநகரான நொம்பெங்கில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மேதின ஊர்வலத்தில் உரிமைக் கோஷங்கள் எழுப்புகின்றார்கள்.

# பன்றிக் காய்ச்சல் தொற்றில் மெக்ஸிகோவில் 168 பேர் பலி

மெக்ஸிக்கோவில் பன்றிக் காய்ச்சலுக்கு இதுவரை பலியானோரின் எண்ணிக்கை 168 ஆக உயர்ந்துள்ளது. 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு தொடர்ந்து நோய் பரவி வருகிறது. அதைக் கட்டுப் படுத்த முடியாமல் அரசு திணறி வருகிறது.

எனவே, நாடு முழுவதும் 5 நாள்கள் முழு அடைப்பு நடத்த மெக்ஸிக்கோ அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் அத்தியாவசியப் பணிகள் தவிர இதர அனைத்து பணிகளையும் நிறுத்தி வைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி கடைகள், வர்த்தக நிறுவனங்கள், ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் ஆகியவை அனைத்தும் 5 நாள்கள் மூடப்படும். மக்களும் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

வீதிகளில் பொலிஸாரும் மருத்துவக் குழுவினரும் ரோந்து சுற்றி வருகிறார்கள். மெக்ஸிக்கோவில் ஏற்கனவே அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பன்றிக் காய்ச்சல் தற்போது மெக்ஸிக்கோ, அமெரிக்கா, நியூஸிலாந்து, கனடா, பிரிட்டன், ஸ்பெயின், ஜேர்மனி, இஸ்ரேல், கோஸ்டரிகா, நெதர்லாந்து, சுவிட்ஸர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய 12 நாடுகளில் பரவியுள்ளது.

மெக்ஸிக்கோ தவிர அமெரிக்காவில் மட்டும் ஒருவர் உயிர் இழந்துள்ளார். இன்னும் பல நாடுகளில் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, தீவிர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உலக அரங்கில்

# ஓசாமா பின்லேடன் இறந்திருக்கலாம் என்பதை ஏற்க மறுக்கிறார் பராக் ஒபாமா

''அல்-குவைதா தலைவர் ஓசாமா பின்-லேடன் இறந்திருக்கலாம் என பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி-சர்தாரி கருத்து வெளியிட்டுள்ளார். இதனை நம்பவும் முடியாது. ஏற்கவும் இயலாது. ஓசாமா இன்னும் உயிருடன்தான் இருக்கிறார்.''

- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வாஷிங்டனில் செய்தியாளர்களுக்கு தாம் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

''அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அல்-குவைதா தீவிரவாதிகளும், தலிபான் தீவிரவாதிகளும் மிகுந்த அச்சுறுத்தலாக உள்ளார்கள்'' என்றும் அவர் கூறினார்.

''சர்வதேச பயங்கரவாதியான ஓசாமா பின்-லேடன் இன்னும் உயிருடன்தான் இருக்கிறார். அவர் இறக்கவில்லை. இந்த அடிப்படையில்தான் நான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். இது விடயத்தில் அசிரத்தையாய் இருக்க முடியாது'' என்றும் அவர் கூறினார்.

''ஓசாமாவும் அவரது சகாக்களும் தங்களுக்கென ஒரு பாதுகாப்பான பகுதியை உருவாக்கிக்கொள்ள முனைகிறார்கள். சவூதியைச் சேர்ந்த ஓசாமாவும், இதர நாடுகளைச் சேர்ந்த அவரது சகாக்களும், பாகிஸ்தான் மண்ணை தற்போது ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''இவர்கள் தங்களுக்கென ஒரு பாதுகாப்புப் பகுதியை உருவாக்கிக்கொள்ள முயல்கிறார்கள். இம்முயற்சியை நாம் முறியடிப்போம். இதுவே எனது தலையாய பணி. அப்படி உருவாக்க அவர்கள் அனு[illegible]திக்கப்பட்டால், அமெரிக்காவுக்கும் உலக நாடுகளுக்கும் அது ஒரு பயங்கர ஆபத்தாகவே அமையும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஈராக்கிலுள்ள பிரிட்டிஷ் படைகளின் பொறுப்புகள் அமெரிக்காவிடம்

பக்தாத், மே 02

தென் ஈராக்கிய நகரான பஸ்ராவில் கடந்த ஆறு ஆண்டுகளாக பணியாற்றி வந்த பிரிட்டிஷ் துருப்புகள், தமது பொறுப்பை வியாழக்கிழமை அமெரிக்க இராணுவத்திடம் கையளித்தன.

ஆறுவருட கால சேவை நிறைவையொட்டி, பஸ்ராவில் இடம்பெற்ற வைபவமொன்றில் உத்தியோகபூர்வமாக இப்பொறுப்பு அமெரிக்க இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் லண்டனில், ஈராக்கில் பலியான பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கான நினைவஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் ஹட்டன் கலந்துகொண்டார்.

பணியின்போது உயிர் நீத்த 234 பேரின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. இவர்களில் 179 பேர் பிரிட்டிஷ் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் [illegible]ளைச் சேர்ந்த சிவிலியன் வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள்.

# கல்லூரி மாணவிகள் ஜீன்ஸ் அணியத் தடை

## பாக். மாநிலத்தில் உத்தரவு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரான லாகூரிலுள்ள ஒரு பெண்கள் கல்லூரி நிர்வாகம் மாணவிகள் ஜீன்ஸ் உடை அணிந்து வர தடைவிதித்துள்ளது. அத்தோடு இறுக்கமான உடை அணியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சல்வார் கமீஸ் அல்லது உடலை கவ்விபிடிக்காத உடை அணியவேண்டும் என் [illegible] அறிவுறுத்தியுள்ளது. சல்வார் கமீஸ் அணிந்தால் துப்பட்டவும் அணிய வேண்டும் என்றும், கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அரச உத்தரவின்பேரில் தான் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது என கல்லூரி நிர்வாகம் கூறியுள்ளது.

இதற்கிடையில் பர்தா அணிந்த மர்மப் பெண்களில் சிலர் மாணவிகளையும், நிர்வாகத்தையும் மிரட்டி ஜீன்ஸ் உடை அணிவதற்கு தடை விதிக்கச் செய்துள்ளனர் என்ற வதந்திகள் எழுந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகவிழி நிலையத்தில் நேற்று நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய அதிபர் கா.தியாகலிங்கம், ஓய்வு பெற்ற தபாலதிபர் எல்.சண்முகம், இலங்கை வங்கி உத்தியோகத்தர் கே.சிவபாலன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)



# கொழும்பிலும் பிற நகரங்களிலும் பல தரப்பினரின் மே தின நிகழ்வுகள்

கொழும்பு, மே2

மே தின நிகழ்வுகள் நேற்றுக் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அரசியல் கட்சிகளாலும் தொழிற்சங்கங்களினாலும் நடத்தப்பட்டன.

சோசலிஸ மக்கள் முன்னணி, இடதுசாரி ஐக்கிய அமைப்பு மற்றும் தொழிற்சங்கங்கள் போன்றவை கொழும்பில் பல இடங்களில் பொதுக்கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்தின.

ஜே.வி.பியின் மேதினக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பொரளை கம்பல் பார்க் மைதானத்தில் இடம்பெற்றது. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அக்கட்சி சார்பு தொழில் சங்கத்தினரும் இதில் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்கள் சங்கம், துறைமுக ஊழியர்கள் சங்கம், அச்சக தொழிற்சங்கம், சுகாதார தொழிற்சங்கம், தபால் தொழில் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து கொழும்பு புறக்கோட்டையில் பேரணியை நடத்தின.

இந்தப் பேரணி மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தை வந்தடைந் தது. பின்னர் அங்கு பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இடதுசாரி ஐக்கிய அமைப்பு மே தின ஊர்வலத்தை புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்தது. இந்தப் பேரணி குணசிங்கபுர மினரல் பார்க் மைதானத்தை வந்தடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

**ஐக்கிய தேசிய கட்சியின் சமூக சேவை நிகழ்ச்சிகள்**

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி மேதினக் கூட்டங்களையோ பேரணிகளையோ நடத்தவில்லை. பதிலுக்கு அக்கட்சி சமூகசேவை நிகழ்வுகளை நடத்தியது.

பிற்றக்கோட்டேயில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் அக்கட்சியின் பிரதான சமூகசேவை நிகழ்வு இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களுக்கு பாடப்புத்தகங்கள், உடைகள், உணவுகள் போன்றவை வழங்கப்பட்டன.

இதேவேளை, காலையில் கொழும்பு புதுக்கடையில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் ஞாபகார்த்த நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் மேதினக் கூட்டங்களும் பேரணிகளும் நடத்தப்பட்டன. இவற்றை அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஏற்பாடு செய்திருந்தன. (சி)



வவுனியா மெனிக் பாம் நலன்புரி நிலையத்திற்கு நேற்று (வெள்ளிக்கிழமை) விஜயம் செய்த ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி, மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வவு னியா மாவட்ட அரச அதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் மக்களுடன் கலந் துரையாடுகின்றமையைப் படத்தில் காணலாம்.

# உறக்கத்திலிருந்த குடும்பஸ்தர் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம்,மே 2

தெல்லிப்பழை துர்க்காபுரம், 8 ஆம் கட்டை வீதியில் பேரம்பலம் வைரவர் ஆலயத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு நித்திரையில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த குஞ்சன் (வயது 40) என்பவரே கொலையுண்டவராவார். இவர் இரு பிள்ளைகளின் தந்தை.

வியாழக்கிழமை இரவு வீட்டின் முன் விறாந்தையில் படுத்து உறங்கிய வேளை, மனைவியும் பிள்ளைகளும் வீட்டறையினுள் படுத்துறங்கியுள்ளார்கள்.

காலையில் மனைவி வீட்டுக்கு வெளியே வந்து பார்த்த போது கணவன் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மல்லாக மாவட்ட நீதிபதி விசாரணைகளை மேற்கொண்டார். (1-68)

## கூட்டம்

கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை பி.ப. 3.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் எனவும் இக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறும் அதிபர் சா.தியாகலிங்கம் அறிவித்துள்ளார். (1-111)

# இனவாதத்தை இல்லாதொழிக்க அரசியல் தீர்வே அவசர தேவை

## பிரேமதாஸ நினைவுதினக் கூட்டத்தில் ரணில் வலியுறுத்து

கொழும்பு, மே2

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் புரையோடிப்போயுள்ள இனவாதத்தை இல்லாதொழிப்பதற்கும் இன ஒற்றுமையின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை அரசு உடனடியாக முன்வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு புதுக்கடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற, மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் 16ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் செயற்பாடுகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேச நாடுகளிலும் இலங்கை மக்களின் இன உறவு சீர்குலைந்துள்ளது. எல்லா இடத்திலும் இனவாதம் விதைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளில் வாழும் எமது நாட்டு மக்கள் அவ்வாறெல்லாம் இனரீதியாக மோதிக் கொள்வதை நாம் காணுகின்றோம். இந்த நிலைமையை இல்லாதொழிக்க இந்த அரசு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மறைந்த தலைவர் ஆர். பிரமேதாஸ இந்த மாதிரியானதொரு இனவாதம் நாட்டில் தலைதூக்காதவாறு நாட்டை நிர்வகித்தார். வடக்கில் பயங்கரவாதமும் தெற்கில் வன்முறையும் மலிந்து கிடந்த ஒரு கால கட்டத்தில் தான் அவர் நாட்டைப் பாரமெடுத்தார். அன்றிலிருந்து அவர் மரணிக்கும் வரை நாட்டில் இன ஒற்றுமையை நிலை நாட்டப் பாடுபட்டார்.

இன்று எமது படையினர் அவர்களின் கடமைகளைச் சரிவரச் செய்து முடித்துள்ளனர். ஆனால், அரசியல்வாதிகள் அவர்களின் பணிகளைப் பூர்த்தி செய்யவில்லை.

அரசின் செயற்பாட்டால் பெரும்பான்மை இன மக்களை சிறுபான்மை இன மக்களும், சிறுபான்மை இன மக்களை பெரும்பான்மையினரும் குறைகூறிக் கொண்டு திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இனவாதத்தின் ஊடாக இந்த நாட்டைஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. அனைவரும் இலங்கையர்கள் என்ற மனப்பான்மையை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விதத்திலான அரசியல் தீர்வொன்றை அரசு முன்வைக்க வேண்டும். அப்போதுதான் எமது நாட்டை முழுமையாகக்கட்டியெழுப்ப முடியும் - என்றார். (சி)

# கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்து இராணுவத் தளபதியே முடிவெடுக்க வேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, மே 2

"போரின்போது கனரக ஆயுதங்களைப் பாவிப்பதா இல்லையா என்பதை இராணுவத் தளபதியே தீர்மானிக்கவேண்டும். இந்த விடயத்தில் அரசு எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாது"

- இவ்வாறு ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச சமூகங்களின் அழுத்தங்களுக்கு தாம் அடிபணியப்போவதில்லை என அரசு கூறுவதாகத் தெரிவித்த அநுரகுமார, ஆனால், போரின்போது கனரக ஆயுதங்களைப் பாவிக்கப்போவதில்லை என அரசு அறிவித்திருப்பதற்குக் காரணம் சர்வதேச அழுத்தங்களே எனத் தெரிவித்தார்.

கனரக ஆயுதங்களைப் போரின்போது பயன்படுத்துவதா, இல்லையா என்ற எந்தவொரு தீர்மானத்தையும் அரசு எடுத்துவிட முடியாது எனவும் சுட்டிக்காட்டிய அநுரகுமார, இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க வேண்டியவர் இராணுவத் தளபதி மட்டும்தான் என வும் கூறினார்.

போரில் வெற்றி பெறுவதற்கான இறு திக்கட்டத்தில் இருப்பதாக அரசு கூறுகின் றது. உண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரையும் அதன் உறுப் பினர்கள் அனைவரையும் அழிப்பதன் மூலமாக மட்டுமே இந்தப் போரில் அரசால் வெற்றிபெற முடியும். நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுவதால் மட்டும் போரில் வென்றுவிட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு புலிகளின் தலைவரையும் உறுப்பினர்களையும் அழிப்பதற்கு அரசு தவறினால் அவர்கள் கெரில்லாப் போர் முறைக்குச் சென்றுவிடு வதற்கான சாத்தி யக் கூறுகள் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார். (சி)

# மரண அறிவித்தல்

## கந்தையா கதிர்த்தம்பி

(திடீர் பரிசோதனைக்குழு முன்னாள் அதிகாரி, இ.போ.ச.,கோண்டாவில்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரித்தம்பி நேற்று (01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - ஆசைப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் கணேசமுருகன் (டென்மார்க்), கலைவாணி(பிரதேச செயலகம்,பருத்தித்துறை) கலைச்செல்வி(ஜேர்மனி), முருகநேசன்(மலேசியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் மனோஜா (டென்மார்க்), விக்னேஸ்வரன் (சிறைச்சாலை, யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும். ராகுல், கோகுல், பவிசாந், சர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதியை நியமிப்பது தொடர்பாக கலந்தாலோசனை

கொழும்பு, மே 02

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஐ.நா. வட்டாரங்களில் கலந்தாலோசிக்கப்படுகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய தலைவரான மெக்ஷிக்கோத் தூதுவர் ஹெல்லர் விசேட பிரதிநிதி ஒருவரை தற்போது இலங்கைக்கு அனுப்புவதன் மூலம் ஐ.நாவின் செயலர் பான் கீ மூனுக்கும் இலங்கை அரசுக்கும் உறவுகளை மேம்படுத்தலாம் என்று கூறினார்.

எனினும் ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதியை அனுப்புவது உதவிகரமாக அமையாது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், அரச சார்பற்ற நிறுவனம் உதவிகளை வழங்குவது குறித்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட வேண்டும் என வெளியான தகவல் குறித்து ஹோம்ஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நலன்புரி நிலையங்களிலுள்ள இளைஞர்களை கிளிநொச்சியில் கைவிடப்பட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு விசாரணைகளை மேற்கொள்வது, காணாமற் போதல் குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள ஹோம்ஸ் ஒருவரை ஒருவருட காலத்திற்கு தடுத்து வைத்து விசாரிப்பது சட்டபூர்வமானது. ஆனால், கண்காணிப்பின் கீழ் அது நடைபெறவேண்டும் - என்றார். (சி)

# இராணுவ இணையம் செயலிழப்பு; புலிகளின் நாசகார வேலையாம்!

கொழும்பு, மே 2

இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் புலிகளின் நாசகார வேலை காரணமாகச் செயலிழந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் செயலிழக்கச் செய்யப்பட்டு, அதில் வன்னியில் கொல்லப்பட்ட பொதுமக்களின் படங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தன எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இராணுவத்தின் தொழில்நுட்பவியலாளர்கள் இந்தப் புகைப்படங்களை அகற்ற முயல்கின்றனர் எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள், விடுதலைப்புலிகளே இதனை மேற்கொண்டனர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

''விடுதலைப்புலிகளே இராணுவ இணைத்தளம் மீது 'சைபர்'என்ற பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொண்டனர். அவர்களது தோல்வி தவிர்க்க முடியாதது என்பதற்கான இன்னொரு அறிகுறி இது ''என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

## பாதுகாப்பு வலயம் மீதான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அரசு அறிவித்த ஆட்சேபத்தை அறிவிப்பதாக நீல் புஹுனே அமைச்சரிடம் தெரிவித்தார்.

உணர்ச்சிகரமான தகவல்கள் ஐ.நாவினால் அம்பலப்படுத்தப்படுவது இது முதல் தடவை அல்ல. முன்னர் வன்னிப் பிரதேசத்தில் மோதல்களின் போது இறந்தவர்களின் எண்ணிக்கையை குறிப்பிடும் அறிக்கையும் ஊடகங்களுக்கு அறியவிடப்பட்டது; தகவல் அம்பலமாக்கப்பட்டது.

செய்மதிப் படங்கள் அம்பலமானது குறித்து ஐ.நா விரைந்து விசாரணைகளை நடத்தி நிலைமையை தெளிவுபடுத்த வேண்டும்; விளக்கம் தரவேண்டும். ஐக்கிய நாடுகள் சபை தன் மீது தானே ஒளிபாய்சி உண்மையைக் கூறும் கட்டம் வந்திருக்கிறது - என்று அமைச்சர் சமரசிங்கா கூறினார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் அரசு அறிவித்த பாதுகாப்பு வலயத்துக்குள் தஞ்சம் அடைந்த பின்னர் விமானப் படையினர் ஜெட் விமானங்களால் குண்டு வீச்சு நடத்திய போது ஐக்கிய நாடுகள் சபையினால் அந்தரங்கமான முறையில் பிடிக்கப்பட்ட செய்மதிப் படங்கள் ஊடகங்களுக்கு அம்பலமாக்கப்பட்டதை தொடர்ந்தே அமைச்சர் சமரசிங்கா ஐ.நா பிரதிநிதி புஹுனேயை அழைத்து விளக்கம் கேட்டார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணப் பிரிவான ''யுஎன்ஓசற்'' (unosat) ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதிக்கும் அதற்கு முன்னரும் எடுக்கப்பட்ட செய்மதிப்படங்கள் இப்போது பத்துக் கிலோ மீற்றர் தூரத்துக்கும் குறுகியுள்ள சிறு நீளத்துண்டு கடற்கரையையும் தென்னந்தோட்டங்களும் கொண்ட பகுதியை காட்டுகின்றன. (அ)

# முல்லைக் கடற்பரப்பில் தற்கொலைத் தாக்குதல்

## படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, மே 02

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை கடற்சமர் இடம்பெற்றது எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படையினரின் ரோந்து படகுகள் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடற்புலிகள் இரண்டு தற்கொலைத் தாக்குதல் படகுகளிலும் ஒரு தாக்குதல் படகிலும் தாக்குதலை மேற்கொண்டனர். அதனை கடற்படையினர் முறியடித்தனர். இச்சமரின்போது கடற்புலிகளின் இரண்டு தற்கொலைப் படகுகளும், தாக்குதல் படகும் கடற்படையினரின் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டன. அதிலிருந்த கடற்புலிகள் 23 பேர் உயிரிழந்தனர் என படைத்தரப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இத்தாக்கு தலில் கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்த இச்செய்தி எழுதும் வரை எவ்விதத் தகவல்களும் வெளிவரவில்லை.

## பாதுகாப்பு வலயத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தங்களுடைய பாதுகாப்பாக மனிதக் கேடயங்களாக உங்களைப் பயன்படுத்துவதால் நீங்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றமை நீடித்துச் செல்கின்றது.

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறி இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வருமாறு உங்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் ஒவ்வொருவரினதும் பாதுகாப்பு மற்றும் சேமநலன்களை வழங்குவதற்கு அரசு தொடர்ந்து அதி முன்னுரிமை வழங்கும் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## பாதுகாப்பு வலயம் மீது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையும் நேற்றிரவு தெரிவித்தது.

பாதுகாப்பு வலயத்தின் வட, தென் பகுதிகளில் கட்டடங்கள் அழிந்தமைக்கான புதிய தடயங்கள் தென்படுகின்றன. இவை ஷெல் வீச்சு மற்றும் விமானத் தாக்குதல்களால் ஏற்பட்டிருக்கலாம் என 'யு.என்.ஓ. சட்' என்ற அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளுக்கு உதவுவதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை தற்செயலாக தமது இணையத்தளங்களில் வெளியாகி விட்டதென யு.என்.ஓ. சட்டின் முகாமையாளர் பிரான் செஸ்கோ பிசானோ 'த டைம்ஸ்' இற்குத் தெரிவித்துள்ளார்.

செய்மதிப் படங்களின் மூலம் தெரியவரும் சேதங்கள் விமானத் தூக்குதல் மூலம் ஏற்பட்டவை என தமது ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விமானங்கள் மூலமாக மாத்திரமே இவ்வாறு துல்லியமாகத் தாக்க முடியும். குறிப்பிட்ட அளவிற்கு அப்பால் ஏற்பட்டுள்ள குழிகளும் விமானக் குண்டு வீச்சினால் ஏற்பட்டவை என்பதை ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, இந்தப் படங்களை மேலும் ஆராய வேண்டுமென வேண்டு கோள் விடுத்துள்ள மனித உரிமை ஆர்வலர்கள், பாதுகாப்பு வலயம் தாக்குத லுக்கு இலக்காகின்றது என்பதற்கான உறுதியான ஆதாரமாக இதனைக் கருதமுடியும் என்று கூறியுள்ளனர்.

இலங்கையின் வடகிழக்கே மோதல் நடக்கும் பிரதேசத்தில் இருக்கும் பொது மக்களை பாதுகாப்பதற்காக இலங்கை அரசால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் பகுதியில் ஷெல் தாக்குதல்களும் குண்டுத்தாக்குதல்களும் நடந்திருப்பதை காட்டக்கூடிய செய்மதித் தொலைக்காட்சிப் படங்கள் பி.பி.சிக்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் மோதல்கள் காரணமாக பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் சிறிய கடற்கரைப் பிரதேசத்தில் அடைபட்டு இருப்பதை, ஐ.நா. சபையினால் எடுக்கப்பட்டிருக்கும் இந்த படங்கள் காட்டுகின்றன.

இந்த ஷெல் மற்றும் குண்டுவெடிப்புகளுக்கு இராணுவம் பொறுப்பல்ல என்று இலங்கை அரசு தெரிவிக்கின்றது.

இது குறித்து விடுதலைப்புலிகள் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

பாதுகாப்பு வலயத்திற்குள் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி சுடவேண் டாம் என்று ஐ.நா. சபை இலங்கை அர சைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டு வரு கின்றது என்று பி.பி.சி. தெரிவித்தது.

(அ-சி-1)


சிங்களம்
பிரிவு I
அடிப்படையில்
இருந்து
பிரிவு II
கடிதம், கட்டுரை,
வாசிப்பு, எழுத்து,
By - E.S.வியதாசா
SLTS - I
பயிற்றப்பட்ட சிங்களம்
ஆரம்பம் 02.05.2009
சனி 12.00 மணி
கற்கும் கல்வி நிறுவனம்
166 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## பிச்சைக்காரர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களிடம் செல்வதற்கு இந்த மக்கள் விரும்புகிறார்கள். அதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும்

குளிப்பதற்கு போதிய இட வசதிகள் இல்லை. குடி தண்ணீர் சுத்தமாக இல்லை. மருத்துவ வசதிகள் போதியனவாக இல்லை. மக்களுக்கு தொழில்துறை இல்லை. உழைத்து வாழ்ந்த மக்கள் விரக்தியுடன் வெறும் கையுடன் இருக்கின்றனர், உணவுக்காக மூன்று வேளையும் அவர்கள் பிச்சைக்காரர்கள் போன்று கையேந்துகின்றனர். இந்த நிலைமை மிகவும் பரிதாபகரமானது, வேதனைக்கு உரியது -என்றார் ஆயர்.

மிக விரைவில் சொந்தக் கிராமங்களில் மக்கள் மீளவும் குடியமர்த்தப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளை அரசாங்கத்தினால் முழுமையாகவும் தொடர்ந்தும் செய்ய முடியாது. எனவே உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். கடும் வெய்யிலில் சிறிய ஒரு கொட்டகைக்குள் வாழுகின்ற மக்களுக்கு தொற்று நோய்கள் வரக்கூடிய ஆபத்துக்களும் உண்டு எனவும் ஆயர் சுட்டிக்காட்டினார்.

### நிவாரணப்பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை

நிவாரணப் பணிகளை உடனடியாக செய்வதற்கு அனைவருக்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் பொதுமக்கள், பொது அமைப்புகள் மற்றும் சமய நிறுவனங்கள் அனைத்தும் நிவாரண பொருள்களை சேகரிக்கின்றனர். ஆனால் அந்த பொருள்களை மதவாச்சி சோதனை சாவடி நிலையத்தின் ஊடாக கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சோதனைச் சாவடியில் உள்ள இராணுவத்தினர் அதற்கு அனுமதி மறுக்கின்றனர். கத்தோலிக்க திருச்சபையினால் கொழும்பில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை மதவாச்சி சோதனை சாவடி நிலையத்தின் ஊடாக கொண்டு செல்ல முடியவில்லை என கொழும்பு பேராயர் ஒஸ்வோல்ட் கோமஸ் என்னிடம் கவலை தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பொருள்களை தாங்கள் கொண்டுபோய் கொடுப்பதாக சோதனைச் சாவடியில் நின்ற இராணுவத்தினர் தெரிவித்தனர். ஆனால் மக்களிடம் நேரடியாக கொண்டுபோய் கொடுப்பதற்கே பேராயர் ஒஸ்வால்ட் கோமஸ் விரும்பியிருந்தார்.

இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொதுமக்கள், பொது அமைப்புகள் எப்படி நிவாரணம் வழங்க முடியும் என்றும் ஆயர் கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் உள்ள பல அமைப்புகள் நிவாரணப் பொருள் களை சேகரிக்கின்றன. ஆனால் மதவாச்சி சோதனை சாவடி நிலையத்தின் ஊடாக எப்படி கொண்டு செல்ல போகின் றார்கள் என்பது குறித்து எனக்கு புரியவில்லை. ஆகவேதான் அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)


யாழ். நகரில் உள்ள போன் செப் நிறுவன மொன்றிற்கு தொழில் நுட்பவியலாளர்கள் தேவை



★ தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்றவர்கள்.
★ மொபைல் போன் திருத்துனர்கள்.
★ மொபைல் போன் கல்வி கற்றவர்கள்.
★ இலத்திரனியல் கல்வி பயின்றவர்கள்.

தொடர்பு:-13/ 2,ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கி முன் ஒழுங்கை, பட்டப்படிப்புக்கள் கல்லூரி முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி 0771553136

SUBRA (14)
சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.
இரு இடங்களிலும்
O/L DAY புதிய பிரிவு
04.05.2009 திங்கள்
காலை 7.00 மணி
தரமான கல்வி தகுதியான ஆசிரியர் மூலம்
2009 A/L கலை,
வர்த்தக, கணித, விஞ்ஞான
புதிய பிரிவு 05.05.2009 மாலை 4.00

BITSMANS
கல்வி நிறுவனம், மாவிட்டபுரம்.
பிரிவு 2
O/L DAY CLASS
(பழைய புதிய பாடத்திட்டம்)
ஆரம்பம்: 04.05.2009
திங்கள் 8.00 a.m.

ஏசியன் கல்வி நிலையம்
O/L DAY CLASS
ஆரம்பமாகி விட்டன.
நிர்வாகி.

ஏசியன் கல்வி நிலையம்
மீசாலை
O/L DAY CLASS
ஆரம்பமாகிவிட்டன.
நிர்வாகி.


## மரண அறிவித்தல்

### முத்துத்தம்பி அமிர்தலிங்கம்

(முன்னாள் தபால் ஊழியர், கொக்குவில் -
முன்னாள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர், கோண்டாவில் பஞ்சேமி வித்தியாலயம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி அமிர்தலிங்கம் நேற்று(01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும் அமுதினி, அஜ சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகுமாரின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், கஜீபனின் (பிரான்ஸ்) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2009) சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக டிப்போ அருகாமையில் உள்ள கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.